# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

## வருடாந்தசெயலாற்றுகைஅறிக்கை

# Annual Performance Report

**2017**



කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு
Ministry of Women and Child Affairs

***உள்ளடக்கம்***


| | |
|---|---|
| அறிமுகம் | 03-05 |
| நோக்கு, செயற்பணி, நிறுவன ஒழுங்கமைப்பு | 06-07 |
| பிரதான எதிர்பார்ப்புக்கள், பிரதான உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள் | 08-09 |
| பதவியணி விபரம் (2017.12.31) | 10-12 |
| சர்வதேச தினக் கொண்டாட்டங்கள் | 13-15 |
| **பிரிவு அடிப்படையிலான செயலாற்றுகை** | |
| நிருவாகப் பிரிவு | 16-18 |
| கணக்குகள் பிரிவு | 19-22 |
| உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 23 -25 |
| திட்டமிடல் பிரிவு | 26 -29 |
| அபிவிருத்திப் பிரிவு | 30 -44 |
| இலங்கை மகளிர் பணியகம் | 45 -65 |
| தேசிய மகளிர் குழு | 66 -84 |
| சிறுவர் செயலகம் | 85 -99 |

*மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அலுவல்கள் அமைச்சின்*

*2017 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை*

*2012 செப்தெம்பர் 12 ஆம் திகதிய*

*அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இன்*

*அறிவுரைகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளது.*

# 01. அறிமுகம்

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சானது, இலங்கையிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் பரம்பரையின் வளர்ச்சிக்காக தாபிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வாத்தமானி அறிவித்தலின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை அமுல்படுத்துவதற்கு ஏற்புடையவாறு அமைச்சுக்கு விசேட செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம், பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் ஒழித்தல் பற்றிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் சம்பந்தமான சமவாயத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தவற்கான சட்டங்களைத் தயார் செய்தல், கொள்கைகளைத் தயார் செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் ஆகிய பணிகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் வெற்றகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக நிலைபேறான மற்றும் சமமான அபிவிருத்தியின் ஊடாக மகளிர் மற்றும் சிறுவர் சமுதாயத்தை வலுவூட்டுவதற்காக பல தசாப்தகாலமாக நிலவிவந்த தேவைப்பாடுகள் பலவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், தேசிய மட்டத்திலான உபாயமுறை மற்றும் கொள்கைகளை வகுப்பதில் பெரும்பாலானவற்றை நாம் எதிர்பார்த்த மட்டத்தில் நிறைவேற்றியுள்ளோம். அதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களை வலுவூட்டல் மற்றும் அவர்களின் அபிவிருத்தியின் பிரதான பங்கீடுபாட்டாளர் என்ற வகையில் பங்கேட்கச் செய்வதற்கும் அபிவிருத்தியின் காத்திரமான பெறுபேறுகள் அவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்கும் வாய்ப்பு உருவானது.

அதற்கமைய விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களுக்கான தேசிய கொள்கையை அறிமுகம் செய்தல், விதவை மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் பெண்களுக்கான மூன்று வருட திட்டத்தைத் தயார் செய்தல், பல்நிலைசார் மற்றும் பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தலை தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அது தொடர்பிலான பிரிவுகளின் கீழ் அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் அமைச்சு மட்டத்தில் பால்நிலைசார் பிரதானப்படுத்தல் பொறிமுறையை மீளமைத்தல், பால்நிலைசார் வரவுசெலவுத்திட்டத்தைத் தயார் செய்வதற்கான வழிகாட்டல்களைத் தயார் செய்தல், சிறுவர் சமவாயத்தை அமுல்படுத்தல் மற்றும் பின்னாய்வு செயன்முறையை வலுவூட்டல், பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்புக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டமை மற்றும் முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக்கான தேசிய தரநியமங்களை வெளியிடல் மற்றும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதும் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்கும் செயன்முறைக்கு மேலதிகமாக பெண்கள் மற்றும் சிறுவர்களை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பல்வித அணுகுமுறைகளின் ஊடாக அமுல்படுத்த 2017 ஆம் ஆண்டு அமைச்சு செயற்பட்டது.

இலங்கையில் பெண்களை வலுவூட்டும் செயன்முறையில் அத்தியாவசிய தேவைப்பாடொன்றாகக் காணப்படுகின்ற தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை மற்றும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தும் பல்வேறு அணுகுமுறைகளின் ஊடாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

மேலும் நாட்டின் 05 மாவட்டங்களுக்குத் தாக்கம் செலுத்திய வெள்ளம், மண்சரிவு மற்றும் அனர்த்தங்களை எதிர்கொண்ட பெண்கள் மற்றும் குடும்பங்களை மீண்டும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்காக ரூ.மி. 75 ஐக் கொண்ட விசேட கருத்திட்டமொன்றை அமுல்படுத்த முடிந்தது.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் விதவைகள் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களை பொருளாதார ரீதியில் வலுட்டுவதற்கு கமத்தொழில், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, வீட்டுக் கைத்தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு ரூ.மி. 48 ஆன ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுக்கவும் அமைச்சுக்கு முடியுமாயிற்று.

உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் குறிப்பாக தோட்டத்துறை உட்பட நாடு முழுவதிலும் அமைந்துள்ள சிறுவர் பாலர் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மனித வள அபிவிருத்தி, கண்காணிப்பு மற்றும் பின்னாய்வுச் செயன்முறையை வலுவூட்டுவதற்கான பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன் கீழ் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் 6000 இற்கு கற்கை மற்றும் கற்பித்தல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல:, முன்னோடிப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல், குறுங்கால சேவைசார் பாலர்பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் சிறுவர் மந்தபோசாக்கு பரவலாக நிலவுகின்ற பிரதேசங்களைத் தெரிவு செய்து அவற்றின் பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு போசாக்குமிக்க காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு ரூ.மி. 5500 ஆன ஏற்பாடுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

பகல்நேர பராமரிப்பு நிலையங்களின் பதவியணியினருக்கு தொழில் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்த முடிந்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக பேணிவர முடிந்துள்ளது.

பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலம் அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகளின் அரவணைப்பை உறுதி செய்வதற்கும், குடும்பங்களுக்கு விசேட திட்டங்களின் கீழ் குடும்பங்களை வலுவூட்டும் கருத்திட்டங்களை அமுல்படுத்தவும் முடிந்துள்ளமையானது மகிழ்ச்சியளிக்கின்றது.

அதற்கமைய, 2017 ஆம் அண்டு எமது நாட்டு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக மிகவும் பயன்வாய்ந்த இலக்குகள் அடைந்துகொள்ளப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டிலும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திக்கான தேசிய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பலம்மிக்க அணுகுமுறையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள நாம் எதிர்பார்த்துள்ளோம்.

# 02. நோக்கு மற்றும் செயற்பணி


## நோக்கு

சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கின்ற அவர்களுக்கு சாதகமான மற்றும் உணர்வுப்பூர்வமான சமூகத்தை உருவாக்குதல்

## செயற்பணி

பெறுமைமிகு தேசத்துக்காக சமூக பொருளாதாரத்தை வலுவூட்டல், சமூகப் பெறுமானங்களை மேம்படுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களினதும் உபாய முறையிலான கூட்டு பங்கேட்பை பெற்றுக்கொள்வதன் மூலம் சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நல்லாட்சி பயன்பாடுகளை உறுதிப்படுத்தக் கூடியவாறான ஏற்புடைய தேவைப்பாடுகளை தயார் செய்தல் மற்றும் கொள்கைகளைத் தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்

# 03. நிறுவன ஒழுங்கமைப்பு



# 04. பிரதான எதிர்பார்ப்புக்கள் மற்றும் உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள்

## பிரதான எதிர்பார்ப்புக்கள்

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையைத் தயார் செய்தல்.
- பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தைத் தயார் செய்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் அபிவிருத்திக்கான பொறிமுறையைத் தயார் செய்து அமுல்படுத்தத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.
- அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையை ஒருங்கிணைப்புச் செய்து சிறுவர் மற்றும் பெண்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கும், அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- அமைச்சு மற்றும் அதற்குரித்தான பிரதிநிதித்துவ நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல்.
- சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக செயற்படுவதற்கு இலங்கை கட்டுப்பட்டுள்ள சகல சர்வதேச சமவாயங்கள் மற்றும் இணக்கப்பாடுகளுக்குமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்குத் தேவையான சட்டரீதியான மற்றும் தேசிய கொள்கைகளை உள்ளடக்கிய சூழலொன்றைத் தாபித்தல்.

## உபாயமுறையிலான அபிவிருத்தி நோக்கங்கள்

- ❖ உயர்தரம்மிக்க முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்புச் சேவையை உறுதிசெய்தல்.
- ❖ சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் நலன்புரிக்கான உரிமைகளை உறுதி செய்வதும், அவர்களை சமூகமயப்படுத்துவதும்.
- ❖ சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும், குறைப்பதும்.
- ❖ பாதுகாப்பற்ற பெண்களின் குடும்பங்களை அபிவிருத்தி செய்தல்.
- ❖ சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைசார் தலையீடுகள்.
- ❖ இலங்கை கட்டுப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்குப் பொருத்தமான உள்ளூர் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உபாயமுறைகளைத் தாபித்தல்.

# 05. பதவியணி விபரம்

## பதவியணி விபரம் (2017.12.31 ஆம் திகதிக்கு)

| தொடர் இல. | பதவி | சேவை | தரம் வகுப்பு | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | தற்போது காணப்படுகின்ற பதவியணி |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | | | | | |
| 01. | செயலாளர் | இ.நி.சே. | | 01 | 01 |
| 02. | மேலதிக செயலாளர் (நிருவாகமும், நிதியும்) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| 03. | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | (விசேட) | 01 | 01 |
| 04. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | SL-1 | 01 | 01 |
| 05. | பிரதம கணக்காளர் | இ.க.சே. | SL-1 | 01 | 01 |
| 06. | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே. | SL-1 | 01 | 01 |
| 07. | பணிப்பாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | SL-1 | 02 | 01 |
| 08. | பணிப்பாளர் (இலங்கை மகளிர் பணியகம்) | இ.நி.சே. | SL-1 | 01 | 01 |
| 09. | பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே. | SL-1 | 01 | 01 |
| 10. | கணக்காளர் | இ.க.சே. | SL-11/111 | 02 | 00 |
| 11. | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே. | SL-11/111 | 05 | 05 |
| 12. | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே. | SL-11/111 | 02 | 02 |
| 13. | உதவிச் செயலாளர் | இ.நி.சே. | SL-11/111 | 02 | 02 |
| 14. | பிரதிப் பணிப்பாளர் (ITC) | இ.த.தொ.சே. | வகுப்பு 1 | 01 | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தரம் 111 | | |
| 15. | உதவிச் செயலாளர் | இ.த.தொ.சே. | 111/11 | 01 | 01 |
| 16. | சட்ட அலுவலர் | திணைக்கள | 111/11 | 03 | 03 |
| | **மூன்றாம் நிலை மட்டம்** | | | | |
| 17. | நிருவாக அலுவலர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (சிறப்புத்தரம்) | MN-07 | 01 | 01 |
| 18. | ஆராய்ச்சி அலுவலர் | திணைக்கள | MN-06 | 01 | 01 |
| 19. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) | மொழிபெயர்ப்பாளர் சேவை | MN-06 | 02 | 01 |
| 20. | உளவள ஆலோசனை அலுவலர் | திணைக்கள | MN-05 | 13 | 12 |
| | **இரண்டாம் நிலை மட்டம்** | | | | |
| 21. | அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 24 | 22 |
| 22. | மகளிர் அபிவிருத்தி உதவியாளர் | திணைக்கள | MN-04 | 335 | 282 |
| 23. | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 01 | 01 |
| 24. | அபிவிருத்தி உதவியாளர் | அபிவிருத்தி உதவியாளர் சேவை | MN-04 | 516 | 336 |
| 25. | நூலகர் | நூலகர் சேவை | MN-03 | 01 | - |
| 26. | அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (1,11,111) | MN-02 | 40 | 34 |
| 27. | நூலக உதவியாளர் | திணைக்கள | MN-01 | 01 | 01 |
| 28. | வரவேற்பு அலுவலர் | திணைக்கள | MN-01 | 01 | 01 |
| 29. | நிவாரணச் சகோதரி | திணைக்கள | MN-01 | 134 | 124 |
| 30. | விடுதி பொறுப்பாளர் | திணைக்கள | MN-01 | 02 | - |
| 31. | விடுதி பொறுப்பாளர் | திணைக்கள | MN-01 | 02 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (உதவியாளர்) | | | | |
| 32. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | த.தொ.ம. தொ.உ. | MT-01 | 03 | 02 |
| 33. | வீடியோ ஒளிப்படப்பிடிப்பாளர் | திணைக்கள | MT-01 | 01 | 01 |
| 34. | நிழற்படப் பிடிப்பாளர் | தற்காலிக | MT-01 | 01 | 01 |
| | **ஆரம்ப மட்டம்** | | | | |
| 35. | சாரதி | இணைந்த சாரதி சேவை | PL-03 | 33 | 28 |
| 36. | புகைப் படக் கலைஞரின் உதவியாளர் | தற்காலிக | PL-01 | 01 | 01 |
| 37. | அலுவலக சிற்றூழியர் | அலுவலக சிற்றூழியர் | PL-01 | 25 | 20 |
| 38. | உளவள ஆலோசனைச் சேவை தொழிலாளி | திணைக்கள | PL-01 | 12 | 11 |
| 39. | சமையற்காரர் | திணைக்கள | PL-01 | 02 | - |
| | | | | | |
| | **சிறுவர் செயலகம்** | | | | |
| 40. | பணிப்பாளர் | இ.நி.சே. | SL-11 | 01 | 01 |
| 41. | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் | இ.நி.சே. | SL- 11/111 | 04 | 04 |
| 42. | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவியாளர் | அ.அ.சே. | MN-04 | 373 | 327 |
| 43. | அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (1,11,111) | MN-02 | 03 | 01 |
| 44. | சாரதி | இணைந்த சாரதி சேவை | விசேட | 02 | 01 |
| 45. | அலுவலக சிற்றூழியர் | அ.சி.சே. | விசேட | 03 | 03 |

# 06. சர்வதேச தினக் கொண்டாட்டங்கள்

## *சர்வதேச மகளிர் தினம*

2017 சர்வதேச மகளிர் தினம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சர் கௌரவ சந்ராணி பண்டார அவர்களின் தலைமையில் மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் பெருமையுடன் கொண்டாடப்பட்டது. “முற்காலத்தையும் காண்பவள் - பலமுடன் வெற்றிபெறுபவள்” என்பது இம்முறை சா்வதேச மகளிர் தினத்தின் தொனிப்பொருளாக இருந்ததுடன், இது தொழில்முயற்சியாளர்களான பெண்களை மென்மேலும் ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. தேசிய வைபத்தை முன்னிட்டு இரண்டு நாட்கள் முழுவதும் மாத்தறை மாவட்ட தொழில்முயற்சியாளர்களான பெண்களின் உற்பத்திகளை உள்ளடக்கிய 75 வர்த்தகக் கூடங்களைக் கொண்ட சந்தை மற்றும் உற்பத்திகளுக்கான வர்த்தகக் கண்காட்சியும் பெண்களுக்கான சுகாதார சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளைக் கொண்ட நடமாடும் சேவையும் நடாத்தப்பட்டது. அத்துடன், 2017.03.01 ஆம் திகதி சா்வதேச மகளிர் தினத்தின் முக்கியத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான நடைபெறுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பில் மக்களை அறிவுறுத்தும் நோக்கத்துடன். விஹாரமஹாதேவி பூங்கா வளவு சுற்றுவட்டத்திற்கு அருகே சிவில் அமைப்புக்களின் ஆர்வளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பெண்களின் பங்கேட்புடன் பேரணியொன்றும் நடாத்தப்பட்டது.



# *உலக சிறுவர் தினம*

**"தொனிப்பொருள் - 'பெற்றோர், பெரியவர்களின் பாசத்தை தக்கவைப்போம் - அழகிய உலகிற்கு பிள்ளைகளை அழைப்போம்"**

2017 ஆம் ஆண்டின் உலக சிறுவர் தின தேசிய வைபவம் 2017 அக்டோபர் மாதம் 01 ஆ் திகதி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் கௌரவ அமைச்சர் சந்திராணி பண்டார அவர்களின் தலைமையில் அநுராதபுரத்தில் நடாத்தப்பட்டது. அநுராதபுரம் மாவட்டத்தை உள்ளடக்கியவாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் 800 பேர் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பல்வேறு விடயரீதியான மற்றும் விடயத்திற்குப் புறம்பான செயற்பாடுகள் தொடர்பில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய பிள்ளைகளுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் இதன் போது வழங்கிவைக்கப்பட்டன. தேசிய நிகழ்வை முன்னிட்டு பிரதேச செயலக மட்டத்தில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பல்வேறு களியாட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தயப்பட்டன.



## சர்வதேச சிறுமியர் தினம்

ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற இந்த சர்வதேச தினத்தை முன்னிட்டு "மகளே, பாதுகாப்பான உலகில் பூரணத்துவம் பெற நாம் உங்களுக்கு கைகொடுப்போம்." எனும் தொனிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்ட இதன் தேசிய வைபவம் 2017.10.11 ஆம் திகதி பண்டார நாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டதுடன், இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் 1000 பேரின் பங்கேட்புடன் பேரணியொன்றும் நடாத்தப்பட்டது. 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒரு மாவட்டத்திலிருந்து பின்னடைவான மற்றும் குறைபாடுகளைக் கொண்ட ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்து மேற்படி 25 பாடசாலைகளுக்குரிய சிறுவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டும் வகையில் சிறுமியரை வலுவூட்டுவதைத் தொனிப்பொருளாகக் கொண்டு தயார் செய்யப்பட்ட வீதி நாடகத்தை காட்சிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# பிரிவுகளின் அடிப்படையிலான செயலாற்றுகை

## 07. நிருவாகப் பிரிவு

### பிரதான செயற்பணி

01. அமைச்சின் பதவியணியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள், ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுக்காற்றுப் பணிகளை பேணிவருதல்.

02. அமைச்சுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்.

03. அமைச்சின் கருத்திட்டங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றத் தேவையான புதிய பதவிகளை நி.பி. 71 இற்கு அமைய ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

04. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கு அமைய திணைக்களப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் ஒழுங்குமறைகள் பதவி உயர்வு ஒழுங்குமுறைகளின் திருத்தங்களை தயார் செய்து அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் பதவி உயர்வு முறையியலை அமுல்படுத்தல்.

05. அமைச்சுக்கு உரித்தான பிரிவுகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளல். (வரவு செலவுத்திட்ட குழுநிலை, அரசாங்க கணக்குகள் குழு, பொது மனுக்குழு, ஒத்திவைப்பு வேளை மீதான பிரேரணைகள் சம்பந்தமான நடவடிக்கைகள்)

06. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பாக அமைச்சரவை அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

07. மக்களின் குறைகள் தொடர்பாக சனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

08. அமைச்சர் அலுவலகம் மற்றும் இராஜாங்க அமைச்சர் அலுவலகத்துக்கு உரித்தான பதவியணியினரின் தாபன நடவடிக்கைகள்.

09. தபால்களை பிரிவுகளுக்கு விநியோகிப்பதும், வெளியே அனுப்பும் கடிதங்களை தபால் மூலம் அனுப்புவதும்.

10. வழங்கல் மற்றும் சேவைகளைப் பேணிவருதல் (பாதுகாப்பு, துப்பரவேற்பாடு, மின்சாரப் பட்டியல்கள், நீர்ப் பட்டியல்கள், செய்திப்பத்திரிகைகள், போக்குவரத்து வசதிகள், தொலைபேசி, புகையிரத ஆணைச்சீட்டு, புதகையிரத பயணச்சீட்டுக்கள், உபசரணை நடவடிக்கைகள், வாகனக் காப்புறுதி)

11. வாகனக் குழுமத்தைப் பேணிவருதல், வாகனங்களை அகற்றல், புதுப்பித்தல் மற்றும் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.

12. கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புப் பணிகள்.

13. முற்பணக் கடன், உற்சவ முற்பணம், விசேட முற்பணம், இடர் கடன், ஆதனக் கடன் மற்றும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் தாபன நடவடிக்கைகள்.

14. பியகம மகளிர் செவண விடுதியைப் பேணிவருதல்.

15. அமைச்சின் பதவியணியினருக்கான தாபன மற்றும் நிதி நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

16. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகள்.

## ➢ பதவியணி அலுவல்கள்

2017.12.31 ஆம் திகதிக்கு அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த பதவியணியினரின் எண்ணிக்கை 1561 ஆகும். அன்றைய தினத்தில் வெற்றிடமாக உள்ள எண்ணிக்கை 339 ஆகும். 2017 ஆம் ஆண்டு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் 08 பேரைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி அலுவலர் ஒருவர் மற்றும் சட்ட அலுவலர்கள் இருவரை பெற்றுக் கொள்ள முடிந்தது.

பதவியணியின் சகல அலுவலர்களினதும் சுயவிபரக் கோவைகளை முறையாகப் பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்தல், நாளாந்தம் விடுமுறை தொடர்பான கடமைகள், சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொடுத்தல், இடமாற்றங்கள், ஓய்வுறுத்தல் போன்ற நிருவாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே அமைச்சரின் பதவியணியினர் மற்றும் இராஜாங்க அமைச்சரின் பதவியணியினர் தொடர்பான தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளும் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சுக்கு உரித்தான சகல அலுவலர்களினதும் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தி, தொழில்நுட்ப ஆற்றல்கள் மற்றும் மொழித் தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளில் அலுவலர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் வெளிநாட்டுப் பயிற்சிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

## ➢ இணை நிறுவனங்களின் தாபன நடவடிக்கைகள்

அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் நிருவாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வழிகாட்டுவது தொடர்பாகவும் நிருவாகப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேற்படி நிறுவனங்களுக்கு அ.நி.சு. 6/2006 இற்கு அமைய ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை திருத்தியமைத்தல், பதவியணிக்கான பதவிகளை ஏற்படுத்தல், நியமனம் செய்தல், பதவி உயர்வு, பதவியணியினரின் சேவைசார் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த நிறுவனங்களின் அலுவலர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்கள், புலமைப் பரிசில்கள், பயிற்சிப் பாடநெறிகள் போன்றவற்றுக்கு அங்கீகாரம் வழங்கல் மற்றும் உரியவாறு லீவு அங்கீகரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 08. கணக்குகள் பிரிவு

## பிரதான செயற்பணி

நிதி விடயம் தொடர்பாக திறைசேரியுடன் முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு மேற்படி திட்டங்களை அமுல்படுத்தும் நடவடிக்கைகள், கருத்திட்டங்கள் உள்ளடங்களாக அமைச்சின் கணக்குகள், கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பில் பொதுத் திறைசேரியின் அரசாங்க கணக்குகள் மற்றும் திறைசேரி நடவடிக்கை திணைக்களங்களுக்கு தேவையான தகவல்களை தயார் செய்தல், அமைச்சின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு முற்பண "பீ" கணக்கு மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு என்பவற்றை உரிய நேரத்தில் தயார் செய்து தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திடம் சமர்ப்பித்தல், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்கள கருத்திட்டங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் வருடாந்த வரவு செலவு திட்டம் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளை தயார் செய்வதை ஒருங்கிணைப்பு செய்தல், அமைச்சு உள்ளடங்களாக அதன் கீழ் காணப்படுகின்ற அனைத்து நிறுவனங்களினதும் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை திறந்து வைத்தல், அவற்றை இயங்கச் செய்தல், மூடிவிடுவது தொடர்பான நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படு மூலதன திட்டத்தை தயார் செய்தல் மற்றும் கட்டுநிதி பற்றிய முன்மதிப்பீடு, மதிப்பீடு பற்றிய கூற்றை தயார் செய்தல் மற்றும் திறைசேரி நடவடிக்கை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல், ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளையும் முகாமைத்துவம் செய்தல், பல்வேறு கருத்திட்டங்கள் உள்ளடங்களாக ஏனைய நிறுவனங்களுக்கு திட்டமிட்டு கட்டு நிதியை விடுவித்தல், வெளிநாட்டுதவிக் கருத்திட்டங்கள் தொடர்பிலான நிதிசார் கட்டுப்பாடு, வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கு, முற்பண கணக்கு, வைப்புக் கணக்கு மற்றும் கருத்திட்டங்களின் இறுதிக் கணக்குகளை சமர்ப்பித்தல், அமைச்சு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அனுப்புதல், வருடாந்த களஞ்சிய பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**ஒதுக்கீட்டுக் கணக்கு 2017**

செலவுத் தலைப்பு - 120 - சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான 2017.12.31 ஆம் திகதிய 259/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள டிஜிஎஸ்ஏ 1 மாதிரிப் படிவத்திலிருந்து 10 ஆவது மாதிரிப் படிவம் வரையான மாதிரிப்படிவங்களும், குறிப்பு (i) முதல் குறிப்பு (iv) (அ) மற்றும் (ஆ) வரையான தகவல்களின் பொழிப்புரையுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆகிய உறுப்புரைகள், 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த)ச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் வேறு நியாயாதிக்க ஏற்பாடுகளுக்கும், 2017 இன் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் 2014 இன் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுக்கும் அமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக அரசாங்க நிதி மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தயார் செய்து உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**2017 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்**

| பக்க இல. | நிகழ்ச்சித்திட்டம் | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை ஒதுக்கம் | குறிநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கம் | நி.பி. 66 மற்றும் 69 இற்கு அமைவான மாற்றல்கள் | தேறிய ஒதுக்கம் | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | <u>மீண்டெழும்</u> | | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 589,566,000 | 6,320,000 | -1950,000 | 539,936,000 | 487,150,031 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 524,616,000 | 5,827,760,000 | 1950,000 | 6,354,326,000 | 6,188,033,062 |
| | உபமொத்தம் (மீண்டெழும்) | 1,114,182,000 | 5,834,080,000 | 0 | 6,948,262,000 | 6,675,183,093 |
| | <u>மூலதனம்</u> | | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 63,600,000 | 63,881,000 | | 127,481,000 | 114,377,605 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 1,212,760,000 | 5,310,000 | | 1,218,070,000 | 847,527,339 |
| | உபமொத்தம் (மூலதனம்) | 1,276,360,000 | 69,191,000 | 0 | 1,345,551,000 | 961,904,944 |
| | முழு மொத்தம் | 2,390,542,000 | 5,903,271,000 | 0 | 8,293,813,000 | 7,637,088,037 |

**செலவினங்களை நிதியீட்டல்**

| | | நிகழ்ச்சித்திட்டம் 1 | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | செலவின விகிதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 1 | உள்ளூர் நிதி | 721,417,000 | 601,527,636 | 721,417,000 | 601,527,636 | 83% |
| | மொத்தம் | 721,417,000 | 601,527,636 | 721,417,000 | 601,527,636 | 83% |

| | | நிகழ்ச்சித்திட்டம் 1 மற்றும் 2 | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | சேலவின விகிதம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11 | உள்ளூர் நிதி | 6,641,276,000 | 6,423,643,503 | 6,641,276,000 | 6,423,643,503 | 98% |
| 12 | வெளிநாட்டு கடன் | 750,000,000 | 522,862,987 | 750,000,000 | 522,862,987 | 70% |
| 13 | வெளிநாட்டு உதவி - கொடை | 179,120,000 | 89,053,911 | 179,120,000 | 89,053,911 | 50% |
| | மொத்தம் | 7,572,396,000 | 7,035,560,401 | 7,572,396,000 | 7,035,560,401 | |

**அரசாங்க ஊழியர்களின் முற்பண பி கணக்கு**

| விபரம் | உச்ச செலவின எல்லை ரூபா | ஆகக் குறைந்த பெறுகை எல்லை ரூபா | உச்ச வரவு மீதி எல்லை ரூபா |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டம் மூலம் தத்துவமளிக்கப்பட்ட வரையறைகள் | 32,000,000.00 | 19,000,000.00 | 90,000,000.00 |

# 09. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## பிரதான செயற்பணி

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் தாபன நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதும், அறிக்கையிடுவதும்.
- தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அமைச்சினுள் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைகள் வெற்றிகரமானதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்தல் மற்றும் அது பற்றிய அவதானிப்புகளையும், சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல்.
- அமைச்சின் கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை ஆராய்தல், அமைச்சின் சொத்துக்கள் சகல வகையிலுமான நட்டங்களிலிருந்தும் உச்சளவில் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதும், அறிக்கையிடுவதும்.
- அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மூன்று (03) மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்.
  - வருடாந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தும், பலவீனமான செயலாற்றுகையைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் சமர்ப்பிப்பதும்.
  - கணக்காய்வாளரினால் வெளியிடப்படுகின்ற கணக்காய்வு வினாக்கள் / கணக்காய்வு அறிக்கைகளுக்கான விடைகளை சமர்ப்பித்தல்.
  - வருடாந்த வழங்கல் (கேள்விகோரல்) திட்டத்தை அமுல்படுத்தல்.
  - வருடாந்த அறிக்கைகள் / செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
  - வருடாந்த பொருட் கணிப்பீட்டை நடாத்துவது பற்றிய கணக்காய்வு.
  - அபிவிருத்தி மற்றும் உள்ளக நிருவாக நடவடிக்கைகள்.
- அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் வருடாந்த செயற்றிட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமாகியுள்ள சிக்கல்களை கணக்காய்வு செய்வதும், அறிக்கையிடுவதும்.

| தொடர். இல. | திகதி | கணக்காய்வு வினா இல. | கணக்காய்வு வினா |
|---|---|---|---|
| 1. | 2017.01.11 | CDWA/09/H-01/2016 | உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை – வங்கி இணக்கக் கூற்று ( 00007040514 - 2016 நவம்பர்) |
| 2. | 2017.01.21 | WA/09/T-26/2017 | SAIVAC தொடர்பான வெளிக் கணக்காய்வு அறிக்கை |
| 3. | 2017.01.26 | MWCA/09/H-18/2017 | வழங்கல் திட்டம் - 2017 |
| 4. | 2017.01.26 | WCA/09/N-23/2016 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2016 யூன் (நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்) |
| 5. | 2017.02.03 | WCA/09/N-23/2016 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2016 ஆகஸ்ட் (நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்) |
| 6. | 2017.02.13 | WCA/09/N-23/2016 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2016 யூலை (நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்) |
| | 2017.02.17 | WA/09/0-4/2015 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2016 ஏப்ரல் (அமைச்சு) |
| 7. | 2017.02.17 | WA/09/0-4/2015 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2016 மே (அமைச்சு) |
| | 2017.02.27 | WA/09/T-26/2017 | அச்சுறுத்தலான பிள்ளைகளுக்கான பாதுகாப்புத் திட்டங்களை தயார் செய்வதும், அது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதும் - 2016 |
| 8. | 2017.03.07 | MWCA/09/H-19/2017 | UNDP கருத்திட்டம் |
| 9. | 2017.04.19 | WA/09/T-16/2015 | சிறுவர் செயலகத்திற்கான இணையத்தளத்தை வடிவமைத்தல் பற்றிய பின்னாய்வு பரிசோதனை |
| 10. | 2017.04.20 | MWCA/09/H-21/2017 | உறுதிச்சீட்டுப் பரிசோதனை – 2016 பெப்ருவரி – மார்ச் |
| 11. | 2017.04.20 | MWCA/09/H-21/2017 | உறுதிச்சீட்டுப் பரிசோதனை – 2016 ஏப்ரல் - யூலை |

| | | | |
|---|---|---|---|
| 12. | 2017.04.24 | MWCA/09/H-01/2017 | உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை – வங்கி இணக்கக்கூற்று (00007040514 - 2017 மார்ச்) |
| 13. | 2017.05.22 | WCA/09/N-23/2016 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2016 (நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்) |
| 14. | 2017.06.07 | MWCA/09/T-28/2017 | ஆட்கடத்தல் மற்றும் வன்முறைக்கு ஆளாவோருக்கான பாதுகாப்பான தடுப்பு இல்லங்களை பேணிவருதல் - 2017 |
| 15. | 2017.07.11 | MWCA/09/H-21/2017 | 2016 ஆம் ஆண்டின் ஏற்பாடுகள் எஞ்சியுள்ளமை |
| 16. | 2017.08.02 | MWCA/09/T-28/2017 | சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வு பற்றிய உள்ளகக் கணக்காய்வு |
| 17. | 2017.08.03 | WA/09/0-5/2016 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பற்றிய கணக்காய்வு |
| 18. | 2017.08.21 | | உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை – வங்கி இணக்கக்கூற்று (174-1-001-3-9026267 – 2017 யூன்) |
| 19. | 2017.09.27 | WA/09/N-03/2015 | மாதிரிக் கிராமங்களைத் தாபித்தல் |
| 20. | 2017.09.28 | WA/09/0-4/2015 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பரிசோதித்தல் - 2017 சனவரி, பெப்ருவரி (அமைச்சு) |
| 21. | 2017.10.09 | | சாதகமான நட்புறவுக் கிராமம் - 2017 |

# 10. திட்டமிடல் பிரிவு

## செயற்பணி

சிறுவர்கள் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கு மற்றும் பூரண அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சினால் ஆற்றப்படுகின்ற சேவைகளை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் மேற்கொள்ளத் தேவையான திட்டங்கள், நடவடிக்கைகள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ தேவைப்பாடுகளை பலமுடன் பூர்த்திசெய்வது திட்டமிடல் பிரிவின் செயற்பணியாகும்.

## பணிகள்

01. சிறுவர் மற்றும் பெண்கள் துறைகள் தொடர்பிலான தேசிய திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் தேவையான பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
02. அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் திணைக்களங்களினதும் தகவல்களை ஒன்றுதிரட்டி வருடாந்த செயற்றிட்டத்தைத் தயார் செய்தல்.
03. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை அறிக்கையிடல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
04. தேசிய மட்டத்திலிருந்து மாவட்ட மட்டம் மற்றும் பிரதேச மட்டம் வரை ஒருங்கிணைப்புச் செயன்முறையை பேணிவருதல்.
05. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சு சார்பாக வழிப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
06. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் புதிய கருத்திட்டப் பிரேரணைகளை சமர்ப்பித்தல்.
07. இனங்காணப்பட்ட விசேட துறைகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

# அமுல்படுத்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017

## 01.திட்டமிடல்

- 2017 ஆம் ஆண்டுக்கான மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினர்களான நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

- அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் மாவட்ட மட்டத்தில் 2017 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சகல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கியதாக மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் 25 ஐ தயார் செய்தமை மற்றும் தேசிய மட்டத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு பதவிநிலை அலுவலர்கள் மற்றும் சகல மாவட்ட செயலகங்களுக்கும் பெற்றுக் கொடுத்தல்.

- சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக்கான 331 கூட்டுத் திட்டங்களைத் தயார் செய்வதற்காக பிரதேச மட்டத்தில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரிவுகளின் வெளிக்கள அலுவலர்களுக்குத் தேவையான அடிப்படை வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தயார் செய்யப்பட்ட பிரதேச திட்டங்களை அமைச்சுக்குப் பெற்றுக் கொண்டு தேவையான திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல்களை மேற்கொள்ளல் மற்றும் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- அமைச்சினால் விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு மூன்று வருட தேசிய செயற்றிட்டம் வரைவு செய்யப்பட்டதுடன், அதற்குத் திட்டமிடல் பிரிவு பங்களிப்பு வழங்கியது.

## 02.முன்னேற்ற மீளாய்வு

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு வருடாந்தம் ஒதுக்குகின்ற வருடாந்த நிதி ஏற்பாடுகளின் மூலம் சிறந்த முன்னேற்றத்தை அடைந்து கொள்வதை உறுதி செய்வதற்காக திட்டமிடல் பிரிவினால் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடுவது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2017 ஆம் ஆண்டு பின்வருமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய பிரிவுகள் மற்றும் திணைக்கள மட்டத்தில் மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளை தயார் செய்தல்.

2. தேசிய மட்டத்தில் மும்மாத முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டதுடன், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 03 நடாத்தப்பட்டமை.

3. அரச பொருளாதார முகாமைத்துவக் குழுவின் தீர்மானங்களுக்கு அமைய காலாண்டு முன்னேற்றத்தை அறிக்கையிடல்.

4. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான மூன்று வருட உபாயமுறையிலான திட்டத்திற்கு அமைய வருடாந்த முன்னேற்றத்தை அறிக்கையிடல்.

5. மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் பொழிப்பு முன்னேற்றத்தை அறிக்கையிடல் - மாவட்ட மட்டத்தில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சின் பதவிநிலை அலுவலர்களின் பங்கேற்புடன் 25 மாவட்டங்களிலும் ஒரு வருடத்தில் இரு தடவைகள் நடாத்தப்படுவதன் மூலம் பிரதேச மட்டத்தில் அமைச்சின் ஏற்பாடுகளின் உச்சளவான பயன்களைப் பெற்றுக் கொள்வதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 03.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் வழிப்படுத்தல்

2017 ஆம் ஆண்டு அமைச்சின் ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சில கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமை மற்றும் மேற்படி கருத்திட்டங்களின் ஏற்புடையதன்மையை ஆராய்வதற்காக அடிக்கடி வெளிக்கள மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் பல திட்டமிடல் பிரிவினால் நடாத்தப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தேசிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்து வழங்கப்படுகின்ற சிபாரிசுகள் மற்றும் முடிவுகள் அடுத்துவரும் நிகழ்ச்சித்திட்டங்களை மென்மேலும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு காரணமாக அமையும்.

1. பகலநேர பராமரிப்பு நிலையம், பாலர் பாடசாலை வளவுகளை பரிசீலித்தல் - கொன்னாவ சாலமுல்ல ‘லக்சந்த செவண’ வீடமைப்புத் திட்டம்
2. மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பகல்நேர பராமரிப்பு நிலையம்
3. புத்தளம் மாவட்ட முந்தலம் பிரதேச செயலாளர் பிரிவின் மலர் பயிர்செய்கைக் கருத்திட்டம்

## 4. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

பொதுவான விடயப்பரப்புகள் தொடர்பில் / நிகழ்காலத்திற்குரிய தலைப்புக்களின் கீழ் வெளிக்கள அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு திட்டமிடல் பிரிவு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை 2017 ஆம் ஆண்டு அமுல்படுத்தியுள்ளது. அதற்கமைய,

- போதைவஸ்துக்களிலிருந்து சிறுவர் மற்றும் பெண்களை விடுவிப்பதற்காக 'ஆலோகய' என்ற பெயரில் இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு சம்பந்தப்பட்ட தரப்பினர்களான நிறுவனங்களுடன் இணைந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்டு போதைவஸ்து ஒழிப்புக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்களினால் போதைவஸ்து ஒழிப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், கொள்கைகள் பற்றிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

  அத்துடன், பெரியவர்கள் போதைவஸ்துப் பயன்பாட்டுக்கு தூண்டப்படுவதை குறைத்தல், சிவில் அமைப்புக்கள் மற்றும் சமுதாயத்தினரின் அது பற்றிய புரிந்துணர்வு, அர்ப்பணிப்பு மற்றும் முனைப்புடனான பங்களிப்பை மேம்படுத்தல் மற்றும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களுடன் கூட்டு அணுகுமுறை ஊடாக போதைவஸ்து ஒழிப்புக்காக செயற்படுவதை உறுதி செய்வதற்காக மாவட்ட மட்டத்திலும் வெளிக்கள அலுவலர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர்களான நிறுவனங்களின் அலுவலர்களை அறிவுறுத்தல் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான ஒரு செயலமர்வுகள் 03 கம்பஹா, குருநாகல் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.

  அவ்வாறே, ஜாஎல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நியாகம பிரதேச செயலாளர் பிரிவில் மகளிர் அமைப்பு அங்கத்தவர்களை இலக்காகக் கொண்ட விழிப்புணர்வூட்டும் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டன. நாடு முழுவதிலும் அச்சுறுத்தலான நிலையிலுள்ள குழுக்கள் பரவலாகக் காணப்படுகின்ற மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்காலத்தில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மேலும், கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய ஒருநாள் பயிற்சி செயலமர்வொன்று தெரிவு செய்யப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் பிரதேச செயலகங்களின் மகளிர் மற்றும் சிறுவர் துறைசார் அலுவலர்களுக்காக நவம்பர் மாதம் கொழும்பில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக இருப்பது மகளிர் மற்றும் சிறுவர் துறைகளின் முன்னுரிமைத் தேவைப்பாடுகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் பயன்வாய்ந்த தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க உகந்த கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்யத் தேவையான அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

# 11. அபிவிருத்திப் பிரிவு

## பிரதான செயற்பணி

அமைச்சின் அபிவிருத்திப் பிரிவின் பிரதான செயற்பணியாக இருப்பது பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் மற்றும் அபிவிருத்தியை உறுதி செய்கின்ற அவர்களுக்கு துன்புறுத்தல்கள் இன்றி வாழ்வதற்கான சூழலைக் கொண்ட உணர்வுப்பூர்வமான சமூகத்தை உருவாக்குவதற்காக அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினாலும் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பில் தேசிய மட்டத்திலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதாகும்.

மேலும், அமைச்சினால் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள வெளிக்கள அலுவலர்களை ஒருங்கிணைப்புச் செய்து மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக் குழுக்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புக்கள் குறிப்பாக ஐக்கிய நாடுகளின் இணை நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற ஏற்பாடுகளின் கீழ் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதும் மேற்படி நிறுவனங்கள் மற்றும் அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புப் பணியும் அபிவிருத்திப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

## அமுல்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017

## 01. சுற்றாடல் சுற்றுலாக் கைத்தொழில் துறைக்கு பெண்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்களை வலுவூட்டல்

சுற்றாடலுக்கு சாதகமான சுற்றுலாத்துறையுடன் இணைந்து உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள், குறிப்பாக உள்நாட்டு மருந்துகள், சேதனப்பசளையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் பாதகமான சுவையூட்டிகள் இன்றி உணவுகளைத் தயார் செய்வது இதன் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றது.

இதனூடாக மிகக் குறைந்த வருமான மட்டத்தில் வாழ்ந்து வருகின்ற தொழில்முயற்சியாளர்களான பெண்களின் உற்பத்திகளை பிரபல்யப்படுத்தல், மேற்படி உற்பத்திகளுக்கு முறையான சந்தையை ஏற்படுத்தல், சுரண்டல், பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் போன்ற சுற்றுலாக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டதாக எழுகின்ற சிக்கல்களை தடுத்துக்கொள்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பெண்களின் உற்பத்திகளை இலகுவாக சந்தைப்படுத்துவதற்கு கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவின் புனிதபூமியை மையமாகக் கொண்டும், மஹுவ பிரதேச செயலாளர் பிரிவிலும், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவிலும் இவ்வாறான 03 விற்பனை நிலையங்களை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




சுயதொழில்முயற்சிகளுக்கான உதவிகள்

## 02.ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்

சமூகத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் பின்னடைவுக்கு இன்று பாரியளவில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள், குறிப்பாக சமூக வலையமைப்புக்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக தாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. ‘‘பெண்’’ இவ்வனைத்து ஊடகங்களின் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்ற மையப்பொருளொன்றாக மாறியுள்ளார். அதற்கமைய பெண்களை வலுவூட்டல் மற்றும் அவரின் பாதுகாப்புக்காக அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பாக சமூகத்தை உணர்வுப்பூர்வமாக்கல் மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்கு இந்த ஊடகங்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

1982 இல் பாரிசில் நடைபெற்ற ‘‘பெண் மற்றும் ஊடக மாநாடு’’ மற்றும் 1995 இன் பீஜிங்கில் நடைபெற்ற ‘‘நான்காவது சர்வதேச மகளிர் சம்மேளத்தின்’’ போது தயார் செய்யப்பட்ட செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதானமானதொரு செயற்பாடாக இருப்பது ‘‘பெண்களின்

அபிவிருத்திக்கு ஊடகங்களின் செயற்பணி'' என்பதாகும். இதனை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சர்வதேச ரீதியில் ஒதுக்கப்பட்டுள்ள தினங்களில் அது பற்றி சமூகத்தை உணர்வுப்பூர்வமாக்கும் பொருட்டு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் செய்தி, நேர்முகக் கலந்துரையாடல், பத்திரிகைகளில் மேலதிக பகுதிகள் பொன்றவற்றின் மூலம் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறு வயதில் கர்ப்பமடைவது பற்றி ''பேதீ திய'' எனும் தொலைக்காட்சி நாடகத்தை தயார் செய்தல்.

- அமைச்சின் செயற்பணி மற்றும் செயற்பாடுகள் பற்றிய சிறிய விவரணச் சித்திரமொன்றைத் தயார் செய்தல்.

- ITN FM வானொலியில் ஒவ்வொரு வார இறுதியிலும் காலை 6 - 7 காலப்பகுதிக்குள் சிறுவர்களின் அரவணைப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்தல்.

- குறைந்த வசதிகளைக் கொண்ட போதிலும் வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றிவருகின்ற அமைச்சின் ஊடக அலகுக்கு நவீன வசதிகளைப் பெற்றுக் கொடுத்து வலுவூட்டல்.

- 'செனெஹஸ' எனும் பத்திரிகையை அமைச்சு ஊடாக வெளியிட்டு விநியோகித்தல்.

## 03. தகவல் தொழில்நுட்ப அலகு

பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டி அவர்களை அபிவிருத்தியில் பங்கேட்கச் செய்யும் போது மற்றும் அவர்களுக்குள்ள சவால்களை வென்றெடுப்பதற்காக பெண்கள் தொடர்பான சரியான தரவுகள் இருப்பதன் மூரம் மேற்படி பணிகளை மிகவும் நம்பகத்தன்மையுடன் மேற்கொள்வது இலகுவானதாக அமையும். மேற்படி நோக்கத்துடன் அமைச்சினுள் இந்த அலகு இயங்கிவருகின்றது. இதன் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.1 நாட்டின் சகல மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலும் அமைந்துள்ள சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளை அமைச்சின் தகவல் தொழில்நுட்ப அலகுடன் வலையமைப்புச் செய்தல்.

3.2 இவற்றிலுள்ள வெளிக்கள அலுவர்களை இப்பணிக்கு இணைப்புச் செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்பக் கருவிகளைப் (Dongle, Pendrive) பெற்றுக் கொடுத்தல்.

3.3 அமைச்சின் தேவைகளுக்கு அமைய தரவுக் கட்டமைப்புக்கள் மற்றும் மென்பொருள்களை வடிவமைத்தல்

- E-women எண்ணக்கருவின் கீழ் தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற விதவைகள் மற்றும் பெண்தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் தரவுக்கட்டமைப்பு மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான வன்முறை பற்றிய தரவுக்கட்டமைப்பை வடிவமைத்தல்.



- அமைச்சின் பல்வேறு பிரிவுகளினதும் தேவைகளுக்கு அமைய தரவுக் கட்டமைப்புக்களை வடிவமைத்தல்.
- சுகுரு லிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான மென்பொருளை அமுல்படுத்தல்.
- அமைச்சின் இணையத்தளப் பக்கத்தை இற்றைப்பத்தி பேணிவருதல்.

3.4 தகவல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

- அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களினதும் அலுவலர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

3.5 அமைச்சு மற்றும் வெளிக்கள அலுவலர்களுக்கு இடையே தொடர்பாடலை இலகுபடுத்தல்.

- அமைச்சு, பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களை வலையமைப்புச் செய்யும் நோக்கத்துடன் வலையமைப்புக் கட்டமைப்பை )APN Solution) தாபித்தல்.
- இதன் கீழ் சகல பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளுக்கு டொங்கல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- அமைச்சு, பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இடையே உள்ளக மின்னஞ்சல் கட்டமைப்பைத் தாபித்தல்.

3.6 அமைச்சின் தகவல் தொழில்நுட்ப வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.

- மத்திய வைரஸ் தடுப்பு முறைமையைத் தாபித்தல )Central Virus Guard System.(
- மென்பொருள், வன்பொருள் மற்றும் வலையமைப்பைப் பராமரித்தல்.



3.7 அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பேணிவருதல்.

3.8 ஆக்கபூர்வமான பங்களிப்பு

- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு “சுவ சவி லிய” உடல் ஆரோக்கிய கையடக்கத் தொலைபேசிப் பதப்பிரயோகம் மற்றும் விவரண நிகழ்ச்சியைத் தயார் செய்தல்.

- ICTA and Dialog நிறுவனங்களுடன் இணைந்து “சுகுரு லிய” மற்றும் “சுகுரு கதா” நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தத் தேவையான ஆயத்தங்களை மேற்கொண்டமை.

- தேசிய வைபவங்களின் போது பெண்கள் மற்றும் சிறுவர்களின் பெருமையை மிளிரச் செய்யும் வகையில் அழைப்பிதழ்கள், விளம்பரங்கள், முதல்நாள் உறை, முத்திரை மாதிரிகள், துண்டுப் பிரசுரங்களை வடிவமைத்தல்.

## 04. சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளைத் தாபித்தல்

நாட்டின் சகல மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிலும் எமது அமைச்சின் சேவைகளை ஆற்றிவருவது மகளிர் அபிவிருத்தி அலுவலர், ஆலோசனை அலுவலர், ஆலோசனை உதவியாளர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர், முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவியாளர், சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் சமூக அலுவலர் மற்றும் நிவாரணச் சகோதரி ஆகிய அலுவலர்களினாலாகும். மேற்படி அலுவலர்கள் ஒரு அலகாக ஒரேஇடத்தில் இருப்பதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களை குறைப்பதற்கும், அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள், சிக்கல்கள் போன்ற சந்தர்ப்பங்களில் அரச பொறிமுறையின் ஊடாக கிடைக்க வேண்டிய பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டல்கள் போன்ற சேவைகளை ஒரே இடத்திலிருந்து வழங்குவது மற்றும் மேற்படி சேவை பெறுநர்கள் தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதும் இலகுவாகின்றது. இந்த அலகினுள் தகவல்களைச் சேகரிக்கின்ற நிலையம் மற்றும் ஆலோசனை நிலையமும் இயங்கி வருகின்றன.

அவ்வாறே பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நாட்டின் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துடனும், அரசாங்க ஆதார வைத்தியசாலைகளில் அமைந்துள்ள ''மித்துறு பியச'' எனும் சேவை நிலையங்களுடனும், ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனும், இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டில் இவ்வாறான 7 அலகுகளை நிர்மாணிப்பதற்கும் 26 அலகுகளுக்கு அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




பியகம பிரதேச செயலகத்தின் அலகு




ஹொரவுப்பொத்தான பிரதேச செயலகத்தின் அலகு

# 05. பால்நிலைசார் பிரதானப்படுத்தல் மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

## 5.1 பால்நிலைசார் சமநியாயத்தன்மைக்காக சமூகத்தை உணர்வுப்பூர்வமாக்குதல் மற்றும் அமைச்சு மட்டத்தில் பால்நிலைசார் பிரதானப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைத் தாபித்தல்.

பால்சிலைசார் அடிப்படையில் பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல் செயற்பாடுகள் மற்றும் அழுத்தங்களிலிருந்து அவரை விடுவித்தல், அவர் தொடர்பிலான பல்வேறு பாதகமான கருத்துக்கள் மற்றும் பாரபட்சம் காட்டல்கள் தொடர்பில் சமூகத்தை உணர்வுப்பூர்வமாக்கல் அதற்காக ஒன்றிணைந்துசெயற்படுகிற்க குழுக்களுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள், இசை நிகழ்ச்சிகள் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை சமூகமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டில் இதுவரை 23 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் மேலும் 15 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல்

## 5. 2 அமைச்சு மட்டத்தில் பால்நிலைசார் பிரதானப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை தாபித்தல்

பால்நிலைசார் பிரதானப்படுத்தலின் போது ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலாருக்கும் சமஅந்தஸ்துடன் மற்றும் சமமான நியாயத்தன்மையுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல் மற்றும் அரச நிறுவனங்களில் பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை குறைத்தல் ஆகிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக 16/2523/740/013 ஆம் இலக்க 2016.12.06 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

i. பெண்கள் மற்றும் சிறுமியருக்கு இடம்பெறுகின்ற பாரபட்சம் காட்டலை ஒழிப்பதற்காக பால்நிலைசார் அடிப்படையிலான கொள்கைகள் மற்றும் பயன்பாடுகளை மேம்படுத்தல்.

ii. பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமமான முறையில் செயற்படக்கூடியவாறு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் பேணிவருதல்.

iii. பால்நிலைசார் சமநிலையைப் பேணிவருதல் மற்றும் பால்நிலைசார் வரவுசெலவுத்திட்டத்தை அமுல்படுத்தல்.

iv. பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்கள் இடம்பெறுவதைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் நடவடிக்கைகளைத் தயார் செய்தல்.

உரிய அலுவலர்களை இதற்காக விழிப்புணர்வூட்டுவதற்கு/பயிற்றுவிப்பதற்குத் தேவையான பின்வரும் நடவடிக்கைகளை சகல அமைச்சுக்களினதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அமைச்சின் செயலாளர்களுக்கு அடிப்படைய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
- அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு நிபுணத்துவ ஆலோசனையின் பேரில் பயிற்சி மொடியுலைத் தயார் செய்தல்.
- அமைச்சு மட்டத்தில் இந்த செயன்முறை பற்றி அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்
- துண்டுப்பிரசுரங்கள் / பதாதைகள் போன்றவற்றை அச்சிடல்.



அமைச்சின் செயலாளர்களை அறிவுறுத்தல்



மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு

## 06. பெண்களுக்கு சாதகமான மற்றும் உதவுகின்ற மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்

பெண்களைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டி, ஒருவருக்கொருவர் மதிப்புடன் பிணைந்துள்ள இடமாக குடும்பத்தை மாற்றியமைத்தல், அவ்வாறான பல குடும்பங்களை ஒன்றிணைத்து மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்புக் கிராமம் ஒன்றை உருவாக்குவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். கிராமங்களைத் தெரிவு செய்துகொள்ளும் போது விதவைகள், பெண்தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் அதிகம் இருக்கின்ற / குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் கூடுதலாக இருக்கின்ற / பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகமாக அறிக்கையிடப்படுகின்ற /வெளிநாடு சென்றுள்ள பெண்கள் கூடுதலாக இருக்கின்ற / மகளிர் பணிகள் அமைப்புத் தாபிக்கப்பட்டுள்ள /பௌதீக வசதிகள் குறைவான கிராமங்கள் தெரிவு செய்யப்படும்.

அவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற கிராமங்களின் பொதுவான சிக்கல்கள் மற்றும் தேவைகளுக்கான உரிய தலையீடுகள் மற்றும் அது தொடர்பான வசதிகளைச் செய்துகொடுத்தல் மற்றும் சமூக, பொருளாதார ரீதியில் பெண்களை வலுவூட்டுவதும் மேற்கொள்ளப்படும். இதன் செயற்குழுவாக பிரதேச செயலாளர் பிரிவின் அரச, அரசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சகல பொறுப்புவாய்ந்த அலுவலர்களையும் உள்ளடக்கிய குழுவினால் கூட்டாக இது அமுல்படுத்தப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு பல கிராமங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதுவரை இனங்காணப்பட்டுள்ள பிரதான சிக்கல்கள் தொடர்பில் தலையீடு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பகல்நேர அரவணைப்பு நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகளை நிர்மாணித்தல், தொழில்முயற்சியாளர்களான பெண்களை இனங்காணல் மற்றும் அவர்களுக்கு மேலதிக பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல், உதவி வழங்குதல், நூலக வசதிகளை மேம்படுத்தல், போதைவஸ்து ஒழிப்பு நிகழ்சித்திட்டங்கள், விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன குறித்த கிராமங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.




சமுதாயத்தை அறிவுறுத்தல்

## 07. சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம்



பொருளாதாரத்தை வலுவூட்டல்

உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல்

2014 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த விசேட கருத்திட்டத்திற்கு 2017 ஆம் ஆண்டுக்கு ரூபா மில்லியன் 50 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதையும் மென்மேலும் வினைத்திறனாக்கும் நோக்கத்துடன் பின்வரும் செயற்பாடுகள் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 7.1 பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களை வலுவூட்டல்

சிறுவர் மற்றும் பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை குறைப்பதற்காக பொலிஸ் நிலையங்க்ளில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களை வலுவூட்டும் நோக்கத்துடன் தற்போது புதுதாக 28 பணியங்கள் நிர்மாணிக்கப்பட்டு தேவையான அலுவலக உபகரணங்களுடன் பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலன்புரிக்காக பொலிஸ் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

017 ஆம் ஆண்டில் 06 பணியகங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஏற்கெனவே உரிய மாவட்ட செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக தம்புத்தேகம மற்றும் கம்பஹ பொலிஸ் நிலயைங்களிலுள்ள பணியகங்களுக்குத் தேவையான அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான வழங்கல் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




கந்தகெட்டிய பொலிஸ் நிலையம்



மாத்தறை பிரிவு பொலிஸ் பணியகத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துவைத்தல்

### 7.2 பெண்கள் அரவணைப்பு நிலையங்களை அமுல்படுத்தல்.

குடும்ப வன்முறை மற்றும் வேறு காரணங்களினால் வன்முறைக்கு ஆளான பெண்கள் மற்றும் அவர்களின் சிறு குழந்தைகளுக்கு சட்டரீதியான நிவாரணம் மற்றும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் வரை அவர்களுக்குத் தற்காலிகமாக அரவணைப்பெற்றுக் கொடுப்பதற்காக இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அமைச்சினால் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, இரத்தினபுரி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தற்காலிக மகளிர் அரவணைப்பு நிலையங்களை இயங்கச் செய்வதற்காக அவி/17/0234/740/001 ஆம் இலக்க 2017.02.07 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் அரசசார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையத்தினூடாக அவர்களுக்குத் தேவையான சட்ட ரீதியான உதவி, ஆலோசனை, மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது மற்றும் அவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை கட்டியெழுப்பி பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டுவதும் மேற்கொள்ளப்படுகின்றது.




மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட அரவணைப்பு நிலையம்



அரவணைப்பு நிலையங்களை நிருவகிப்பது பற்றி அரசசார்பற்ற அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல்

### 7 3.பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்களைத் தடுத்தல் மற்றும் அதற்குப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற பொறிமுறையை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித்திட்டம்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாத்தறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன் போது பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தலை ஒழித்தல் மற்றும் அதற்குப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மேற்படி மாவட்டத்தின் சகல அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களையும் ஒன்றிணைத்து மேற்படி செயற்பாடுகளைக் குறைப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றும் ஒவ்வொரு துறைகளும் இதற்கு எவ்வாறு உதவி வழங்க வேண்டும் என்ற முறையை இனங்காண்பது மற்றும் தலையீடு செய்வது பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

### 7.4 துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக தடுப்பு இல்லங்களைத் தாபித்தல்.

கடந்த ஆண்டு மொனராகலை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்களை ஒழித்தல் மற்றும் அதற்குப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரச மற்றும் அரசசார்பற்ற பொறிமுறையை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்ட தரப்பினாக்ளின் கோரிக்கையாக இருப்பது துன்புறுத்தல் அல்லது துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களை வைத்தியசாலைகளில் அனுமதித்து சாதாரண நோயாளர்களுடன் ஒரே இடத்தில் வதிவிட சிகிச்சைஅளிக்கும் போது பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு விதமாக உளவியல் பாதிப்புக்களுக்கு மென்மேலும் ஆளாகின்றனர் என்பதாகும்.

எனவே, இந்த ஆட்களுக்கு வைத்தியசாலை வளவில் மருத்துவவர்களின் பூரண கண்காணிப்பின் கீழும், சிகிச்சையளிக்கும் நிலையிலும் தனியானதொரு இடத்தில் இவர்களை வைத்திருப்பதானது அவர்களின் உடல் மற்றும் உளவியல் சுகாதாரத்தை மீளக் கட்டியெழுப்பக் காரணமாக அமையும் என்பதாகும். அதற்கமைய, மொனராகலை மாவட்ட வைத்தியசாலை வளவில் புதிய தடுத்துவைக்கும் இல்லமொன்றைத் தாபிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 08. பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலை குறைப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்தல் (2016 – 2020)

பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலைக் குறைப்பதற்கு பல்வேறு தோற்றப்பாடுகளின் ஊடாக ஆராயப்பட்டுள்ள பால்நிலைசார் துன்புறுத்தலை குறைப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தின் பிரதான 09 துறைகளாக இருப்பது சிறுவர் அலுவல்கள், அனத்த முகாமைத்துவம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்கல்வி, பெண்களை வலுவூட்டலும், நிவாரணமும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுகாதாரம், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடகம் ஆகியனவாகும். உப துறைகள் 02 இன் கீழ் உயர் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக் கல்வியும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு முதல் இந்த செயற்றிட்டம் அமுலில் உள்ளது.

இந்தத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம், பொருளாதாரததைக் கட்டியெழுப்பல், துன்புறுத்தலைத் தடுத்தல், தலையீடு செய்தல், தொழில் நிலையம், புலம்பெயர் பெண்கள் எதிர்நோக்குகின்ற துன்புறுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்தல், பாதுகாப்பு மற்றும் சட்டத்தை தத்துவமுள்ளதாக்கல், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, வெகுசன ஊடகம், அனர்த்த முகாமைத்துவம் ஆகிய துறைகள் உள்ளடங்குகின்றன.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்தத் தேவையான ஏற்பாடுகளை 2017 – 2019 நடுத்தரகால வரவசெலவுத்திட்ட சட்டகத்தின் கீழ் பெற்றுக் கொடுக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒவ்வொரு துறைக்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களான அமைச்சு அவர்களின் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் கீழ் நிதி ஏற்பாடுகளை ஏற்கெனவே ஒதுக்கியுள்ளதுடன், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகளை அமுல்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு திட்டம் தொடர்பிலான சகல செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம், பின்னாய்வு மற்றும் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் இந்த அமைச்சின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.









செயற்றிட்டத்தை வெளியிட்டு வைத்தல்

**09. இனப்பெருக்க சுகாதாரத்திற்குள்ள உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக தேசிய மற்றும் சிவில் சமூகம் / அமைப்புக்களின் ஆற்றல்களை வலுவூட்டல் (UNFPA)**

பால்நிலைசார் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வது மற்றும் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள் மற்றும் அதன் மூலம் இடம்பெறுகின்ற அவர்களின் உரிமை மீறல்களைக் குஜறத்து அவர்களுக்கு அபிவிருத்தியின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன், இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ரூபா மில்லியன் 0.9 ஆன ஏற்பாடுகள் இந்த ஆண்டில் மேற்படி நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

**9.1 பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலுக்கு மற்றும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குச் சேவைகளை ஆற்றுவது தொடர்பில் அரச மற்றும் அரசசார்பற்ற பொறிமுறையில் ஈடுபடுத்துகின்ற முறையியலைத் தயார் செய்தல்**

(வவுனியா, திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை)

**9.2 பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்கள் தொடர்பிலான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அறிக்கையிடல்**

இது தொடர்பிலான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அறிக்கையிடுவது இன்றும் முறையாகவும், பொதுவான மாதிரியமைப்புக்கும் அமைய இடம்பெறாமை காரணமாக இந்த துன்புறுத்தல்கள் பற்றிக் காணப்படுகின்ற புள்ளிவிபரங்களின் உண்மைத்தன்மையை உறுதிசெய்துகொள்வது கடினமானதாக உள்ளது. எனவே முறையாக தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான முறையியலொன்று தயார் செய்யப்பட்டு அதன் முன்னோடிக் கருத்திட்டமாக கொழும்பு மாவட்டத்தில் இந்தத் தரவுகளைச் சேகரிப்பதற்கு உத்தேச நிறுவனங்கள் முறையான மாதிரியமைப்புக்கு அமைய தரவுகளைச் சேகரிப்பது தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டு தரவுகள் சேகரிப்பக்கப்பட்டு வருகின்றன.

## 10. கிராமிய பொருளாதார அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களுக்கான முதலீடுகளில் 25% இனை பெண்களுக்காக ஈடுபடுத்தல்.

- கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்களில் அரசாங்கம் முதலீடு செய்யும் போது ஈடுபடுத்தப்படுகின்ற ஏற்பாடுகளில் ஆகக் குறைந்தது 25% இனை நேரடியாக பெண்களுக்காக மற்றும் அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு முதலீடு செய்வதற்கு கொள்கைசார் தீர்மானமொன்றை மேற்கொள்ளல்.
- இதற்குப் பொதுத் திறைசேரி மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஊடாக தேசிய கொள்கையொன்றைத் தயார் செய்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளின் ஊடாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவலர்கள் அமைச்சின் மூலம் இந்தக் கருத்திட்டங்களில் பெண்களை ஈடுபடுத்தல், கண்காணிப்பு மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

  பால்நிலைசார் வரவுசெலவுத்திட்டமிடல் பற்றிய செயலமர்வுகளை நடாத்தல், பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளைத் தயார் செய்தல் (KPI) போன்றன மேற்கொள்ளப்பட்டன.

### 10.1 பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கான தேசிய திட்டம்

அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அமைய தயார் செய்யப்படுகின்ற இந்தத் தேசிய திட்டம் 06 துறைகளை உள்ளடக்கியிருப்பதுடன் இது பல்தரப்புக் கூட்டு அணுகுமுறையின் ஊடாக அமுல்படுத்தப்படவுள்ளது. உத்தேச 06 துறைகளாக இருப்பது சுகாதாரம், வாழ்வாதார அபிவிருத்தி, உதவிச் சேவைகள் (சட்டம், வீடமைப்பு, சிறுவர் அரவணைப்பு), பாதுகாப்பு, சமூக அரவணைப்பு மற்றும் கொள்கை வகுப்பு மற்றும் விழிப்புணர்வூட்டல் ஆகிய துறைகளாகும்.

அமைச்சினால் தற்போது பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கான தேசிய திட்டம் வரைவுசெய்யப்பட்டுள்ளது. வரைவு செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில் சிவில் அமைப்புக்கள் உட்பட சகல தரப்பினர்களான நிறுவனங்களிடமிருந்தும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு மென்மேலும் இது போசிக்கப்படும்.

## 10.2 பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயம் (CEDAW)

இலங்கை சமா்ப்பித்துள்ள 08 ஆவது இடைக்கால (Periodic Report ) அறிக்கைக்கு பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான சா்வதேச சமவாயக் (CEDAW) குழு மூலம் அவா்களின் சிபாரிசுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு அமைச்சினால் மேலதிக செயலாளரின் (அபிவிருத்தி) தலைமையிலான குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் மூலம் குறித்த சிபாரிசுகள் தொடா்பில் ஏற்புடைய சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இந்த சிபாரிசுகளின் கீழ் தொடா்ந்தும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தொடா்பில் மேற்படி குழுவானது தலையீடுகளை மேற்கொள்ளும்.

# 11. இலங்கை மகளிர் பணியகம்

## நோக்கு

**வலுவூட்டப்பட்ட பெண்கள் சமுதாயத்தை எதிர்காலத்திற்காக உருவாக்கும் இலங்கையின் முன்னோடி நிறுவனமாதல்.**

## செயற்பணி

**பெண்களை சமூக, பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்காக அவர்களை ஒழுங்குபடுத்தல், அவர்களின் அறிவு, திறமை மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்தல் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்துவது உட்பட சேவைகளை ஆற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல், அமுல்படுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்.**

## நோக்கங்கள்

- பொருளாதார, சமூக, கல்வி, அரசியல் மற்றும் கலாசார துறைகளில் இலங்கைப் பெண்கள் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களைச் செய்துகொடுத்தல்.
- பெண்களாக இருப்பதன் காரணமாக பல்வேறு துறைகளில் தற்போது எதிர்நோக்கிவருகின்ற தடைகளை நீக்குவதற்கு அவர்களை வலுவூட்டல்.
- பெண்களுக்கு சம உரிமைகள் மற்றும் சமவாய்ப்புக்களை உறுதி செய்ய வேண்டிய துறைகளை இனங்காணல், அதற்குத் தேவையான அரச கொள்கைகளைத் தயார் செய்வதற்கு உதவுதல் மற்றும் அதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## பிரதான பணிகள்

1. இலங்கைப் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. பெண்களாக இருப்பதனால் அவர்கள் எதிர்நோக்குகின்ற சமூக அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.


3. சேவைபெறுவோர், பெண்கள் மற்றும் ஆற்றப்படுகின்ற சேவைகள் தொடர்பிலான தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதும், பேணிவருவதும்.

4. உயர் தொழில்வாண்மை நிபுணத்துவத்தைக் கொண்ட விளைதிறன்மிக்க சேவையை ஆற்றுவதை உறுதி செய்வதற்காக மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்

5. ஒட்டுமொத்த பெண்கள் சமுதாயத்தினதும் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.


6. பெண்களை கிராமிய மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பல்வேறு மட்டங்களை வலையமைப்புச் செய்து அவர்களை மென்மேலும் வலுவூட்டல்.

## <u>நிறுவன ஒழுங்கமைப்பு</u>




## மகளிர் அமைப்புக்களின் வலையமைப்பு

ஆராய்ச்சி அஅலுவலர் (01) ,ஆலோசனை அலுவலர் (10), அபிவிருத்தி அலுவலர் (22) , மகளிர் அபிவிருத்தி அலுவலர் (338), ஆலோசனை உதவியாளர் / அலுவலர் (220) , நிவாரண சகோதரி (124) , முகாமைத்துவ உதவியாளர் (2) ,நூலக உதவியாளர் (01), அலுவலக சிற்றூழியர் (4), விடுதிக் காப்பாளர் (01) ,உதவி விடுதிக் காப்பாளர் (01) , ஆலோசனை நிலையங்களின் அலுவலக சிற்றூழியர் (08)




பொருளாதார, சமூக, பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களை வலுவூட்டல், பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலை தடுத்தல் சமஅந்தஸ்து ஆகிய பிரதான துறைகளின் கீழ் இலங்கை மகளிர் பணியகம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

# அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017

## 01. விதவைகளான பெண்கள் மற்றும் குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்களை வலுவூட்டுவதற்காக சுயதொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்

தொழிலற்ற பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் பெண்களுக்கு வருமான உருவாக்க வழிமுறைகளை அறிமுகம் செய்தல், இனங்காணப்பட்ட குடும்பத்திற்கு தலைமை தாங்கும் பெண்களை கருத்திட்டங்களில் ஈடுபடுத்தல் மற்றும் அவர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்தல், கருத்திட்ட ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் மற்றும் உரிய சேவைகளுக்கு வழிப்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மகளிர் பணி அமைப்பு, விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களின் சங்கத்தை அடிப்படையாகக் கொண்டு வயது 18-65 இற்கு இடையிலான குறைந்த வருமானம் பெறுகின்ற பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களை வலுவூட்டுகின்ற சுயதொழில் கருத்திட்டங்களாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் வட்டி இல்லாத நிவாரண சுழல் கடன் வழங்கப்படுகின்றது. குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்ணாக இருத்தல், கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குள்ள ஆற்றல், குறைந்த வருமான மட்டம், தங்கி வாழும் பிள்ளைகளின் எண்ணிக்கை என்பன இங்கு தகவுதிறன்களாகக் கருதப்படும்.

இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுயதொழில்வாய்ப்புக் கடன் கருத்திட்டங்கள் 32 உம், உள்நாட்டு உற்பத்திக் கருத்திட்டங்கள் 9 இற்கும் ரூ.மி. 9.36 செலவிடப்பட்டு பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் பெண்கள் 535 பேருக்கு பயன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 02. விதவைகளான பெண்கள் மற்றும் குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்களை வலுவூட்டும் தேசிய நிலையம் (கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி இந்தத் தேசிய நிலையம் தாபிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கமாக இருப்பது யுத்தம் காரணமாக விதவையான சகல இன பெண்கள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு விசேட அரவணைப்பு முறையொன்றை அறிமுகம் செய்வதாகும். தற்போது இந்த நிலையத்தினால் வட மாகாணம் முழுவதிலும் பரந்துள்ள விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்டுள்ள குடும்பங்களை வலுவூட்டுவதற்கான பலம்மிக்க அரச பொறிமுறை தாபிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அமுல்படுத்தப்படுகின்ற திறன் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், பிரதேசத்திற்குத் தனித்துவமிக்க கைத்தொழில்களான பனை உற்பத்தி, கைப்பணி உற்பத்திகள் மற்றும் தையல், அழகியற்கலை போன்ற திறன்சார் பயிற்சிகளின் மூலம் வருமான உருவாக்க வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், ஆலோசனைச் சேவைகளில் ஈடுபடுத்தல் மற்றும் தேசிய நிலையத்தைப் பேணிவருதல், பராமரிப்புச் செய்தல் போன்ற பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளினதும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் தகவல்களைப் பெற்று, தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளுக்கு வருமான உருவாக்கக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு 05 திறன் பயிற்சிகள் நடாத்தப்பட்டு பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பெண்கள் 92 பேருக்கு பயன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய நிலையத்தைப் பேணிவருதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், திறன் பயிற்சிகளுக்கும் ரூ.மி. 1.235 செலவிடப்பட்டுள்ளது.

## 03. “திரசர குருஷி” (நிலைபேறான கமத்தொழில்) நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் குடும்பத்தில் பொருளாதார நிலைபேறான தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உள்நாட்டு விவசாயப் பொருளாதாரப் பயிர்செய்கைகளில் பெண்களை ஈடுபடுத்தல் மற்றும் சமநிலையான கிராமிய சூழலில் குடும்ப வருமான மட்டத்தை மேம்படுத்துவதாகும்.

- இந்தக் கருத்திட்டத்தின் மூலம் மருந்து, பூக்கள், மலர்ச் செடிகள், தானியப் பயிர்ச் செய்கை, விதை, சேதனப் பசளை, விலங்கு வேளாண்மை, விலங்கு உணவு உற்பத்தி மற்றும் வர்த்தகப் பயிர்ச் செய்கைகளை சேதன விவசாயப் பயிர்ச் செய்கைக் கருத்திட்டங்களாக மேம்படுத்தல் மற்றும் விதை, செடி, சேதனப் பசளை மற்றும் பயிற்சியளிப்பதும் மேற்கொள்ளப்படும்.

- தொழில்நுட்ப அல்லது உதவி நிறுவனமாக கமத்தொழில் அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், விஞ்ஞாபன மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்களிடமிருந்து வளப்பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

- 2017 ஆம் ஆண்டில் அநுராதபுரம், மாத்தளை, பதுளை, அம்பாறை, மொனராகலை, குருநாகல் ஆகிய 06 மாவட்டங்களில் இக்கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் கமத்தொழில் கருத்திட்டங்கள் 20 இற்கு ரூபா மில்லியன் 2.174 ஆன ஏற்பாடுகள் செலவிடப்பட்டுள்ளதுடன், பெண்கள் 382 பேருக்கு பயன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 04. வருமான உருவாக்க வழிமுறைகளுக்கு ஊக்குவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

சுழல் கடன் திட்டத்தின் மூலம் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் வெற்றிகரமான வியாபாரமொன்றைப் பேணிவரத் தேவையான முகாமைத்துவ அறிவு, திறமைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தங்கி வாழும் மனநிலையிலிருந்து விடுவித்து குறைந்த வருமானம் பெறும் பெண்களை தொழில்முயற்சியாளர்களாக பொருளாதார ரீதியில் பலம்பொருந்தியவர்களாக மாற்றியமைப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இலங்கை மகளிர் பணியகத்தின் சகல கடன் நிகழ்ச்சித்திட்டங்களையும் வெற்றிகரமாக்குவதற்கான உதவி நிகழ்ச்சித்திட்டமான இந்த நிகழ்ச்சித்திட்டம் தொழில்முயற்சிசார் அபிவிருத்தி பயிற்சி மற்றும் கணக்குப் பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு சிறிய வியாபார அபிவிருத்தி பிரிவு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வளப்பங்களிப்பைப் பெற்றுக் கொள்கின்றது.

2017 இல் தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி மற்றும் கணக்குப் பயிற்சிகள் 120 இற்கு ரூபா மில்லியன் 3.0627 ஆன ஏற்பாடுகள் செலவிடப்பட்டு பெண்கள் 5458 பேர் பயன்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.




கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி மற்றும் கணக்குப் பயிற்சி

### 05. திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பெண்களின் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் பெறுமதிசேர்ப்பதை மேம்படுத்துவதற்கு பெண்களை ஊக்குவிப்பது இந்த பயிற்சி மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அறிவு, திறன், தொழில்நுட்ப முறைகள் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் வளப் பங்களிப்பினை கைப்பணிக் கைத்தொழில் நிறுவனம், தேசிய அருங்கலைகள் பேரவை, லக்சல மற்றும் கமத்தொழில் திணைக்களம் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் திறன் பயிற்சிகள் 20 இற்கு ரூபா மில்லியன் 0.996 ஆன ஏற்பாடுகள் செலவிடப்பட்டு பெண்கள் 200 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 06. பெண்களின் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தை

இலங்கை மகளிர் பணியகத்தில் பதிவு செய்துள்ள மகளிர் பணி அமைப்புக்களின் அங்கத்தவர்களது பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் பெறுமதியை மேம்படுத்துவதற்கு பெண்களை

ஊக்குவித்தல், ஆக்கங்கள் மற்றும் உற்பத்திகளுக்கான போட்டித்தன்மைமிக்க சந்தையை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

- மகளிர் தின தேசிய வைபவத்தை முன்னிட்டு உற்பத்திக் கண்காட்சி, சந்தை, லிய சக்தி புத்தாண்டுச் சந்தை, தளதா பெரஹராவை முன்னிட்டு உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தை, செத்சிறிபாய உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தை என்பன தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றன.

- காலி, மன்னார், கம்பஹா, களுத்துறை, நுவரெலியா, மொனராகலை, அநுராதபுரம், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை, குருநாகல், பொலன்னறுவை ஆகிய 13 மாவட்டங்கள் மற்றும் பிரதேச மட்டத்தில் சந்தைகள் நடாத்தப்பட்டுள்ளன.

- மகளிர் பணி அமைப்புக்களின் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் மகளிர் பணியகத்தின் வளப் பங்களிப்பு மூலம் மற்றும் பல்வேறு ஊடக நிறுவனங்களின் பிரச்சார உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2017 இன் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தைகள் 18 இற்காக ரூபா மில்லியன் 1.45 ஆன ஏற்பாடுகள் செலவிடப்பட்டுள்ள பெண்கள் 2177 பேருக்கு பயன்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.



மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தை

## 07. உணவு உற்பத்திச் சந்தையை ஆரம்பித்தல் (லிய சக்தி ரச பொஜுன் விற்பனை நிலையம்)

விசம் அற்ற உள்நாட்டு உணவுகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தல், உணவுத் தொழில்நுட்பம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தரமான உயர் மட்ட உற்பத்திகளைத் தயார் செய்தல். சந்தை வாய்ப்புக்களின் மூலம் வருமான மட்டத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் லிய சக்தி ரச பொஜுன் விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

- அம்பாறை மாவட்டத்தின் லாஹுகல மங்குல் மஹா விஹாரை பிரதேசத்தில் முறையற்ற வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற பெண்களுக்கு முறையான விற்பனைக் கூடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்துகொடுத்தல். இந்தக் கருத்திட்டத்தின் முதற் கடட்மாக 04 விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தல்.

- விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

- வளப் பங்பளிப்பை லாஹுகல பிரதேச பொறியியலாளர் அலுவலகம், உணவு மேம்படுத்தல் சபை, சிறிய கைத்தொழில் மற்றும் கிராமிய அலுவல்கள் அமைச்சினூடாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் அம்பாறை மாவட்டத்தின் லாஹுகலயில் (மங்குல் மஹா விஹாரை பிரதேசத்தில்) லிய சக்தி வர்த்தக நிலையத்தின் 04 விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தல் மற்றும் தொழில்முயற்சியாளர்களான பெண்கள் 45 பேருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.




பெண்கள் தற்போது பேணிவருகின்ற முறையற்ற வியாபார நிலையமொன்று

## 08. சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டம்

பெண்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டல் மற்றும் கிராமிய கடன்சுமையைக் குறைப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

சுழல் கடன் திட்டமானது, 1992 ஆம் ஆண்டு முதல் 22 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன், ஏற்பாடுகள் பிரதேச செயலகங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. பெண் ஒருவருக்கு ஆகக் குறைந்தது ரூபா 5,000 முதல் உச்சளவாக ரூபா 30,000 வரை கடன் வழங்கப்படுகின்றது. ரூபா -/5,000 முதல் ரூபா -/10,000 வரை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கடன் அங்கீகரிக்கப்படுவதுடன், ரூபா -/20,000 முதல் ரூபா -/30,000 வரையான கடன் மகளிர் பணியக பணிப்பாளின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்படும்.

மேலும், சுழல் கடன் மற்றும் உத்தேச கடனைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சுழல் கடன் பொறிமுறையை வலுவூட்டுவதற்காக கண்காணிப்பு மற்றும் கணக்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் கண்காணிப்புக்காக ரூ.மி. 0.115 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை, நுவரெலியா, பொலன்னறுவை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, கொழும்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய 13 மாவட்டங்களில் 50 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டு சனவரி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ரூ.மி. 7.463 ஆன தொகை சுழல் கடனாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 690 ஆகும்.

## 09. கணக்குப் பயிற்சி

சுழல் கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் சரியான முறையில் கணக்குப் பதிவுக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல், கணக்குப் பதிவின் போது பேணிவர வேண்டிய பிரதான கணக்குப் பதிவேடுகள், கொடுக்கல் வாங்கல்களின் நம்பகத்தன்மையை ஏற்படுத்துகின்றவாறான முக்கிய ஆவணங்கள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக இறுதிக் கணக்குகளைத் தயார் செய்வதற்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன், கணக்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் முதற்கட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 25 இற்காக ரூபா மில்லியன் 0.356 ஆன ஏற்பாடுகள் செலவிடப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் பயனாளிகளான பெண்கள் 1251 பேர் பயனடைந்துள்ளனர்.

## 10. வனிதா சக்தி மன்றம்

கிராமியப் பெண்கள் மற்றும் அவர்களின் குடும்ப வருமானம் மற்றும் சேமிப்பை மேம்படுத்தல், நிதிநிதிக் கட்டுப்பாடு பற்றிய ஆற்றல்களை ஏற்படுத்தல், சாதகமான மற்றும் இலகு நிபந்தனைகளின் கீழ் பெண்களுக்கு தமக்கே உரிய நிறுவனச் சட்டகமொன்றின் ஊடாக கடன் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பைச் செய்துகொடுப்பது மற்றும் அவர்களின் சேமிப்புக்களை கிராமத்தினுள்ளேயே தடுத்துவைத்துக் கொள்வது இதன் நோக்கமாகும்.

இந்த ஆண்டில் சிறிய நிதிக் கிளைகளின் செயற்பாடு மற்றும் கணக்குப் பதிவேடுகளைப் பரிசீலனை செய்தல், செயலிழந்துள்ள சிறிய நிதிக் கிளைகளை முடிவுறுத்தல், மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து சிறிய நிதிக் கிளைகளை சட்டபூர்வமாக பதிவு செய்தல் மற்றும் அங்கத்தவர்களின் வைப்பு, பங்கு வைப்பு, சேமிப்பு, சிறுவர் மற்றும் குழுக்களின் வைப்புக்கள் ஆகிய வைப்பு முறைகளை அறிமுகம் செய்வதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை 9 மாவட்டங்களில், 21 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வனிதா சக்தி சிறிய நிதிக் கிளைகள் 56 இயங்கிவருவதுடன், இவற்றில் 35 முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. வடமேல் மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களின் சிறிய நிதிக் கிளைகளை மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து சட்டபூர்வமாக பதிவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

2017 சனவரி மாதம் முதல் செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை வனிதா சக்தி சிறிய நிதிக் கிளைகள் 14 இலிருந்து ரூபா மில்லியன் 8.154 ஆன கடன் தொகை பயனாளிகள் 618 பேருக்கு மத்தியில் வழங்கப்பட்டுள்ளது. கண்காணிப்பு நடவடிக்கைகள் 10 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 11. தோட்டத்துறை பெண்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டல்

இலங்கையில் பொருளாதார ரீதியில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் சனத்தொகையில் %24.3 ஆனோர் தோட்டத்துறையில் சேவையாற்றும் மக்களாவார்கள். தோட்டத்துறையின் ஊழியப் படையணியில் பெரும்பான்மையானோர் பெண்களாவார்கள். எனவே, தோட்டத்துறைப் பெண்களுக்கு விளைதிறன்மிக்க மேலதிக வருமான வழிமுறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் புதிய சந்தைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

தோட்டத்துறைப் பெண்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கான நிபுணத்துவ அறிவைப் பெற்றுக் கொடுத்தல், தொழில்முயற்சிசார் பயிற்சி மற்றும் கருத்திட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 1.990 ஆன ஏற்பாடுகள் 39 கருத்திட்டங்களுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், ஆகஸ்ட் மாத இறுதிக்குள் ஆடை தைத்தல், சிறு உணவுகளை தயார் செய்தல், பாடசாலை சீருடை தைத்தல், வீட்டுத் தோட்டம் மற்றும் விலங்கு வளர்ப்புக் கருத்திட்டங்கள் மற்றும் அழகியற்கலை போன்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 20 நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், பயனாளிகளான பெண்களின் எண்ணிக்கை 319 ஆகும்.

## 12. வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்களுக்கான மாற்று வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டம்

பெண்கள் வெளிநாடு செல்வதனால் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக ஏற்படுகினற் அச்சுறுத்தலை ஒழித்தல் மற்றும் வெளிநாடுகளில் இடம்பெறுகின்ற பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் சுகாதார சிக்கல்கள் பொன்ற நிலைமைகளிலிருந்து அவர்களை விடுவிடுத்துக் கொள்வதற்காக காத்திரமான நடவடிக்கையாக வெளிநாடு செல்வதற்குப் பதிலீடாக இந்நாட்டினுள்ளேயே மாற்று வருமான வழிகளைச் செய்துகொடுப்பது இதன் நோக்கமாகும்.

- கருத்திட்ட அறிவு மற்றும் சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்களுக்கான கடன் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்



பமுனுகொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் களிமண் மூலமான கைத்தொழில், தும்புக் கைத்தொழில், வெற்றிலைப் பயிர்செய்கைக்கான கடன் உதவிகள் வழங்கப்பட்ட மாற்று வருமான வழிமுறைகளுக்கான கருத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 3.49775 ஆன ஏற்பாடுகள் 140 கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டு பயனாளிகளான 140 பெண்கள் சுயதொழில் கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிடவை மற்றும் தோல் சம்பந்தப்பட்ட உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், வீட்டுத் தோட்டப் பயிர்செய்கை, விலங்கு வேளாண்மை, உணவு மற்றும் வெறு சந்தைப்படுத்தல்கள் மற்றும் காலத்தின் அடிப்படையிலான கருத்திட்டங்கள் போன்ற கருத்திட்டங்களுக்கு ரூபா -/25000வீதம், பணத்தில் ஒரு பகுதியை அறவிட்டுக் கொள்வதன் அடிப்படையில் கடன் உதவியாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஆகஸ்ட் மாத இறுதி வரை பயனாளிகளான பெண்கள் 43 பேர் சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 13. புனர்வாழ்வு நிறுவனங்களில் தங்கியுள்ள பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் (ஹெற்ற மங்கட – கத்தட சுவசெத்த)

வறுமை மற்றும் வேறு ஊக்குவிப்புக்களினால் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அச்சுறுத்தலான நிலைமையிலுள்ள பெண்களுக்கு சமூகத்திற்குச் சாதகமான வருமான வழிமுறைகள் தொடர்பில் முறையான வழிகாட்டல் மற்றும் தொழில்முயற்சியாளரான பெண்களாக சமூகமயப்படுத்துவது இதன் நோக்கமாகும்.
சிறையில், மெத்செவண தடுப்பு நிலையம் போன்றவற்றில் தங்கியிருக்கும் பெண்களுக்கு சுயபெருமையுடன் எழுந்திருப்பதற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் சமுதாய சீர்திருத்தத்தில் ஈடுபடுத்தியுள்ள மற்றும் உரிமப்பத்திரம் மூலம் விடுவிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி மற்றும் அதற்கான கருத்திட்ட உதவிகள் மற்றும் மூலம்பொருட்கள், உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பது இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



திருகோணமலை சிறையில் தங்கியுள்ள பெண்களுக்காக நடாத்தப்பட்ட பாடசாலை சீருடை தைக்கும் கருத்திட்டத்திற்கு ஜுக்கீ தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு

2017 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 0.899 ஆன ஏற்பாடுகள் 5 கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டு பெண்கள் 312 பேர் பயிற்றப்பட்டுள்ளனர். சீருடை, சிறுவர் ஆடைகள், பிடவைப் பைகள், திரைச்சீலை தைத்தல், கடதாசிப் பை, கடித உறை தயாரித்தல், பாதணி தயாரிப்பு, கேக் உற்பத்தி, கைப்பணி உற்பத்திகள் போன்ற சுயதொழில்வாய்ப்புக்களில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 14. மாவட்ட மற்றும் பிரதேச அமைப்புக்களின் பெண்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டல்

இலங்கை மகளிர் பணியகத்தினால் வலையமைப்புச் செய்யப்பட்டுள்ள மகளிர் பணி அமைப்புக்களின் பெண்களை பொருளாதார வலுவூட்டும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு ஆண்டான 2017 ஆம் ஆண்டை முன்னிட்டு குழுக் கருத்திட்டங்களில் ஈடுபடுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 2.0 ஆன ஏற்பாடுகள் 10 கருத்திட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், பெண்கள் 10 பேரைக் கொண்ட ஒரு குழு ஒரு கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. தும்பு சம்பந்தப்பட்ட உற்பத்திகள், பத்திக் மற்றும் ஆடை வடிவமைப்பு, புளொக் கல் உற்பத்தி, காலாண் உற்பத்தி, மரமுந்திரிகை துண்டாக்கல், விலங்கு வேளாண்மை, கருவாடு உற்பத்தியும், பொதியிடலும் போன்ற 10 குழுக் கருத்திட்டங்களுக்கு ரூபா மில்லியன் 1.98197 ஆன தொகை செலவிடப்பட்டு பெண்கள் 140 பேருக்கு மூலப் பொருட்களும், உபகரணங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 15. மிகவும் வறிய பெண்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக “ஜீவிதயட்ட நவ மங்கக்” (வாழ்க்கைக்கு புதிய வழி) – புதிய களனி பாலத்தை மையமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம்

புதிய களனிப் பாலம் மற்றும் புதிய வீதி நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக சேதவத்த, வதுல்லவத்த மற்றும் ஒருகொடவத்த ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்ந்துவந்த 350 குடும்பங்கள் கொலன்னாவ சாலமுல்ல லக்சந்த புதிய வீடமைப்புத் தொகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இங்கு பெண்களை பிரதானமாகக் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடமாடும் ஆலோசனை முகாம்களை நடாத்தல், ஆய்வுத் தரவுகளுக்கு அமைய கூடுதலானவர்களின் நாளாந்த வருமானம்

சுயதொழில்வாய்ப்புக்களுடன் இணைந்ததாகக் காணப்படுவதானல் இரண்டாம் கட்டத்தின் போது பெண்களை ஊக்குவிப்பதற்கு தொழில்முயற்சிசார் பயிற்சி மற்றும் சுயதொழில்வாய்ப்புக்களை மேம்படுத்திக் கொள்வதற்கான உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
குறித்த பிரதேசத்தின் கருத்திட்டங்களை இனங்காணல் மற்றும் இலங்கை மகளிர் பணியகத்தில் பதிவு செய்துள்ள மகளிர் பணி அமைப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், மனப்பாங்கு அபிவிருத்திக்கான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டுள்ளது. 04 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள், 04 பயிற்சிகளை நடாத்தல் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ.மி. 0.58468 ஆன ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 16. அரவணைப்பு நிலையங்களை பேணிவருதல்

பாலியல் மற்றும் குடும்ப வன்முறை மற்றும் ஆட்கடத்தலுக்கு ஆளாகின்ற பெண்களை அவற்றிலிருந்து தடுத்தல் மற்றும் ஏற்கெனவே அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பெண்களை அதிலிருந்து விடுவிப்பதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் அரவணைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பொருத்தமான நிறுவனக் கட்டமைப்பொன்றைப் பேணிவருவது இதன் நோக்கமாகும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மற்றும் பிள்ளைகளுக்கு தற்காலிக தங்குமிடம், உளவியல் சுகாதார சிகிச்சை, ஆலோசனை, சட்டரீதியான வழிகாட்டல்கள், உணவு, மருந்து, உடை வழங்குவது, தேவையான பெண்களை அவர்களின் கல்வி மட்டத்திற்கு உகந்த தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல், சுயதொழில்வாய்ப்பு பயிற்சியளித்தல், பிரிந்தள்ள குடும்பங்களை மீளக் கட்டியெழுப்புவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும் கம்பஹா அரவணைப்பு நிலையங்களைப் பராமரிப்புச் செய்வதற்கு ரூபா மில்லியன் 1.5 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளடன், ரூபா மில்லியன் 0.652 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. இந்த நிலையங்களை நிருவகிப்பது, அமைச்சவை அங்கீகாரத்தின் கீழ் அரசதுறை மற்றும் தனியார் துறை ஆகியன இணைந்தாகும்.

| அரவணைப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ள மாவட்டம் | 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரை அரவணைப்பைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை | நிருவாகச் செலவினம் | கட்டிடத்தின் உரிமை |
|---|---|---|---|
| கொழும்பு (02 நிலையங்கள்) | பெண்கள் 53 பேர்<br>சிறுவர்கள் 50 பேர் | அமைச்சினால் | மகளிர் உதவி நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. |
| மாத்தறை | பெண்கள் 16 பேர்<br>சிறுவர்கள் 50 பேர் | | |

| | | | |
|---|---|---|---|
| கம்பஹா | பெண்கள் 01 | அமைச்சினால் | மேல் மாகாண சபைக்கு உரித்தானது. |
| யாழ்ப்பாணம் | பெண்கள் 15 | அமைச்சினால் | யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு நிலையத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. கட்டிடம் அமைச்சுக்கு உரித்தானது. |
| முல்லைத்தீவு | பெண்கள் 01 | | |
| மட்டக்களப்பு | பெண்கள் 02 பேர் | அமைச்சினால் | அமைச்சுக்கு உரித்தானது. |
| சிறு சேவைபெறுநர்கள் | பெண்கள் 88 பேர் சிறுவர்கள் 64 பேர் | | |

கொழும்பு மற்றும் கம்பஹா அரவணைப்பு நிலையங்களின் பராமரிப்புக்கு ரூபா மில்லியன் 1.4 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூ.மி. 1.40 ஆன ஏற்பாடுகள் செலவிடப்பட்டுள்ளன. பயனாளிகளின் எண்ணிக்கை 70 ஆகும்.

**01. மகளிர் அபிவிருத்தி பயற்சி நிலையம்**

பயிற்சித் தேவைகளைக் கொண்டுள்ள சகல பெண்களுக்காகவும் பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய நிலையத்தைத் தாபிப்பது இதன் நோக்கமாகும்.
தெஹியோவிட்ட, மொனராகல, வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பெண்கள் அபிவிருத்திப் பயிற்சி நிலையங்கள் 03 ஐ அபிவிருத்தி செய்தல் மற்றும் சுயதொழில் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்தல், சந்தை நடவடிக்கைகளை மேம்படுத்தல். பிரதேச செயலகம் மற்றும் அதற்கு வெளியே பெண்களுக்கு இந்த நிலையங்களில் உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயிற்சி அளித்த பின்னர் பொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்லும் வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.
2018 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் நிலைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா மில்லியன் 0.83 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 17. பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

பால்நிலைசார் மற்றும் பாலியல் அடிப்படையிலான துன்புறுத்தல்கள் பற்றி ஆராய்வதற்கான தேசிய செயற்றிட்டத்திற்கு அமைய பெண்களை வலுவூட்டல் மற்றும் துன்புறுத்தலைத் தடுத்தல் ஆகிய

துறைசார் திட்டத்தின் உபாயமுறைகளின் கீழ் சமூகத்தை வலுவூட்டல், சமுதாய திரட்டல், ஒழுங்குபடுத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் கரைச்சி, கந்தாவளை, நீர்கொழும்பு, எஹலியகொட, அம்பகமுவகோரள மற்றும் களுத்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் 08 ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் தொடர்பில் துன்புறுத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக கைத்தொழில், பெருந்தோட்டத் துறை மற்றும் அரச, தனியார் துறைகளை அடிப்படையாகக் கொண்டு 39 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

## 18. ஆலோசனை நிலையங்களைப் பேணிவருவதும், பராமரிப்பும்

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆட்கள் மற்றும் நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பது மற்றும் தமது சிக்கலுக்கு வெற்றிகரமான தீர்வைத் தேடிப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களை பலப்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டின் தற்போதைய தேவைகளுக்குப் பொருத்தமானவாறு அமைச்சினால் ஆற்றப்படுகின்ற ஆலோசனைச் சேவைகளை வினைத்திறனுடன், உயர் தரத்தைக் கொண்டதாக பேணிவருவதற்கு மாவட்ட மட்டத்தில் 11 நிலையங்களின் ஆலோசனை அலுவலர்கள் 09 பேர் மற்றும் பிரதேச மட்டத்திலான சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளின் ஆலோசனை உதவியாளர்கள் 220 பேரும் செயற்பட்டு வருகின்றனர். அதற்கமைய, உயர் தரம்மிக்க சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு பதவியணியினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 2017 டிசம்பர் மாதம் வரை சேவைபெறுநர்கள் 1541 பேர் இதன் மூலம் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

## 19. சாதகமான நட்புறவுக் கிராமம் கருத்திட்டம் (சுமிதுரு கம்மான நிகழ்ச்சித்திட்டம்)

இதன் கீழ் சிக்கல்கள் குறைவான குடும்பங்களைக் கொண்டுள்ள கிராமமொன்றை உருவாக்குவதற்கு நிலைபேறான அபிவிருத்தி அணுகுமுறைகளை இனங்காணல், திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. சிக்கல்கள் பரவலாகக் காணப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவொன்றை (கிராமம்) தெரிவு செய்து கூடுதலாக சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள சில குடும்பங்களை ஒரு ஆய்வின் மூலம் தேர்ந்தெடுத்து மேற்படி குடும்பங்கள் தொடர்பில் உளவியல், ஆன்மீக, பொருளாதார, உடல்சார் நோய் நிவாரணம் மற்றும் சுகாதார அபிவிருத்தி, கல்வி, அழகியற்கலை, சட்டமும், ஒழுங்கும் ஆகிய தொனிப்பொருள்களின் கீழ் சிக்கல்களை இனங்காணல், உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்துகொடுத்தல், நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களை தொடர்புபடுத்தி கூட்டு அபிவிருத்தி அணுகுமுறையை நோக்கிப் பயணித்தல், தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இக்கருத்திட்டத்திற்கு ரூபா மில்லியன் 2.0 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2017 இல் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 12 கருத்திட்டங்களுக்கு ரூபா மில்லியன் 1.8249 ஆன தொகை செலவிடப்பட்டு 5602 குடும்பங்களுக்குப் பயன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 20. “யொவுன் வசந்தயட அருத்பர ஹெடக்” இளைஞர்களின் வசந்தத்திற்கு அர்த்தப்பூர்வமான எதிர்காலம் எனும் நிகழ்ச்சித்திட்டம்

ஆகக் குறைந்த வசதிகளுடன் வாழும் இளைஞர் சமுதாயக் குழுக்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் வாழ்க்கை பற்றிய வாழ்க்கை பற்றிய நடைமுறை புரிந்துணர்வை பெற்றுக் கொடுத்தல் மற்றும் இளைஞர் குழு ஊடாக சமூகத்தின் ஏனைய இளைஞர், யுவதிகளின் உளவியல் மற்றும் மனப்பாங்குசார் சிக்கல்களை இனங்காணக்கூடிய சமூக மாற்றத்திற்கான முன்னோடிக் குழுவை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

வயது 12-20 இற்கு இடைப்பட்ட இளைஞர் சமுதாயத்தினருக்காக இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. உளவியல் ஆலோசனை முறைகள் மற்றும் சிகிச்சை முறைகளை அறிமுகம் செய்தல், சமய நல்லிணக்கத்துக்கான சர்வமத கற்பித்தல்கள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்தல், சுகாதாரம், போசனைக்கு போதைவஸ்து ஒழிப்பு, சமூக நோய்கள், புற்றுநோய் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்தல், தலைமைத்துவ திறமைகளுக்கான கட்டிளமைப்பருவ பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி மற்றும் அனுபவப் பகிர்வு (முதியோர் இல்லம், சிறுவர் இல்லம், நன்னடத்தை மற்றும் சிறைச்சாலை அவதானிப்பு சுற்றுலாக்கள்) கல்வி மற்றும் களியாட்டங்களுக்கான ஆக்கபூர்வமான சிந்தனை, கல்வி நுட்ப முறை, நினைவை வளர்க்கும் உபாயமுறைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடைமுறைச் செயன்முறைகள், சமூக உணர்வுப்பூர்வமானதன்மை மற்றும் வகைப்பொறுப்புக்கூறுவதற்கான சிரமதானம், ரசனை, தானம் வழங்கும் செயற்பாடுகள், பல்வேறு திறன் அபிவிருத்திக்கான போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான 27 கருத்திட்டங்களுக்கு ரூ.மி. 2.0 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 23 கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூ.மி. 1.998 ஆன தொகை செலவிடப்பட்டு இளைஞர் யுவதிகள் 1591 பேருக்கு பயன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 3419 பேருக்கு ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 21. “திறிய மங்பெத்த” நிகழ்ச்சித்திட்டம்

நாடு முழுவதிலும் பரந்துள்ள தொழில்முயற்சியாளர்களான பெண்கள் தமது பிரதேசத்திற்கு தனித்துவமான வளங்களின் மூலமான உற்பத்திகளில் ஈடுபடுத்துவது மற்றும் பொருளாதாரத்தை

வலுவூட்டும் சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்களை வலுவூட்டுவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தேச நோக்கங்களாகும்.

2017 ஆம் ஆண்டில் ரூ.மி. 5.0 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. 18 மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகள் 19 இல் பெண்கள் 576 பேருக்கு சுயதொழில்வாய்ப்புக் கருத்திட்டங்கள் 20 நடாத்தப்பட்டுள்ளதுடன், ரூபா மில்லியன் 4.998 ஆன ஏற்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

## 22. ஊடக மற்றும் பிரச்சாரம் மற்றும் நூலகத்தை பேணிவருதல்

இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சேவைகள் தொடர்பில் சமூகத்தை அறிவுறுத்தல். பல்வேறு துறைகளின் ஊடாக பெண்களின் அறிவு மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தல் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு சாதகமான ஊடக கலாசாரத்தை நோக்கிப் பயணிக்கச் செய்வதற்காக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள், நூலகத்தைப் பேணிவருதல் மற்றும் காந்தா சவிய சஞ்சிகையை வடிவமைத்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காந்தா சவிய சஞ்சிகையை அச்சிடல் மற்றும் நூலகத்தின் பராமரிப்புச் செலவினம் ரூ.மி. 0.653666 ஆகும்.

## 23. முன்னேற்ற மீளாய்வும், பின்னாய்வும்

மகளிர் பணியகத்தினால் பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சகல நிகழ்ச்சித்திட்டங்களையும் பதவி நிலை அலுவலர்களின் கண்காணிப்பின் பேரில் மாவட்ட மட்டத்தில் பின்னாய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்வது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது இரத்தினபுரி, மாத்தளை, குருநாகல், திருகோணமலை மாவட்டங்களில் 4 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் ஆலோசனை உதவி அலுவலர்களுக்கு கருத்திட்ட அறிக்கை தொடர்பிலான 03 கூட்டங்களும் வெளிக்கள அவதானிப்புக்கள் 06 உம் நடாத்தப்பட்டுள்ளன.

## 24. விசேட கருத்திட்டங்கள் (வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் உதவி வழங்கும் கருத்திட்டங்கள்)

### 24.1 பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பத் தலைவிகளை வலுவூட்டும் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட கால்நடைவளக் கருத்திட்டம் - கொரியா உதவி ) KOICA Hope Farm project )

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றலை வளர்ப்பது இதன் நோக்கமாகும்.

கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் தொண்டர் ஊழியரான செல்வி கிம் யுன்ஹா கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கோணாவில், கரைச்சி மற்றும் அக்கராயன் குளம் ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு கால்நடைவளக் கருத்திட்டமாக (கறவைப் பசு வளர்ப்பு) இது அமுல்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் 20 இற்கு சுயதொழில் ஊக்குவிப்பு, தொழில்முயற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல், 40 கறவைப் பசுக்கள் மற்றும் அதற்கான கொட்டில்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மேற்படி குடும்பங்களின் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 24.2 பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் (ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன்)

பாலியல் மற்றும் பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தல்களுக்கு எதிராக சமூகத்தை வலுவூட்டுவதற்கு சமுதாயத்தை பலப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.
துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமனம் செய்தல், சமுதாய கவனக் குழுக்களை (Vigilant Groups) கட்டியெழுப்பல் மற்றும் வலுவூட்டுவதற்காக அவர்களின் செயற்பணி, பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்கநெறிகளை உள்ளடக்கிய வழிகாட்டல் தொகுப்பொன்று தயார் செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக பால்நிலைசார் மற்றும் பாலியல் அடிப்படையிலான துன்புறுத்தல்கள் பற்றி அறிக்கையிடப்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் 08 இல் முன்னோடிக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல். அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஏனைய பிரிவுகளிலும் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 24.3 பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பப் பெண்களுக்கான தொழில்முயற்சிசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - UN Women நிறுவனத்தின் அனுசரணையின் கீழ்

தொழில்முயற்சிசார் அபிவிருத்தி ஊடாக பொருளாதாரத்தை வலுவூட்டுவது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆடை மற்றும் விவசாய உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களான பெண்களுக்கு வாய்ப்புக்கள் மற்றும் தேவைகளை இனங்காணும் செயன்முறைசார் ஆய்வு புத்தளம் மற்றும் மாத்தறை மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்டுள்ளது. மேலும் பெறுமதிசார் பகுப்பாய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில், கண்டுபிடிப்புக்கள், உத்தேச தலையீடுசெய்யும் தரப்பினர்கள் 82 பேருடன் கலந்துரையாடுவதற்கான 02 செயலமர்வுகள் புத்தளம் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நடாத்தப்பட்டுள்ளன. செயலமர்வுகளின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட இறுதி அறிக்கை மற்றும் கருத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் தொழில்முயற்சிசார் அபிவிருத்திக் கருத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

### 24.4 புதிய சந்தை வாய்ப்புக்களை இனங்காணல் (டேவிட் பீரிஸ் நிறுவனத்துடன் இணைந்து)

மகளிர் பணியகத்தில் பதிவு செய்துள்ள மகளிர் பணி அமைப்புக்களின் அங்கத்தவர்களை வலுவூட்டுவதற்காக கைப்பணி, ஆடை மற்றும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்களின் உற்பத்திகளின் தரம், நியமம், புதிய தொழில்நுட்பம் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது இதன் நோக்கமாகும்.
05 மாவட்டங்களில் உ ணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்கள் 85 பேருக்கு செயலமர்வொன்று நடாத்தப்பட்டதுடன், மகளிர் பணி அமைப்பு அங்கத்தவர்கள் 22 பேருக்கு உணவு உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. தொழில்முயற்சியாளர்களான பெண்களை தொழில்நுட்ப அறிவின் மூலம் பூரணப்படுத்தி அதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டும் நோக்கத்துடன், டேவிட் பீரிஸ் நிறுவனமும், இலங்கை மகளிர் பணியகமும் ஒன்றிணைந்து மேல் மாகாண பெண்கள் 25 பேருக்கு முச்சக்கர வண்டிகளை திருத்துவது பற்றிய தொழில்நுட்பப் பயிற்சிப் பாடநெறி பண்டாரகம டேவிட் பீரிஸ் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

## 24.5 தொழில்முயற்சிசார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (யுனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து)

யுனிலீவர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான முகவர்களாக ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் மகளிர் பணி அமைப்புக்களின் அங்கத்தவர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.
மகளிர் அபிவிருத்தி அலுவலர்களை அறிவுறுத்தல் மற்றும் ஒரு மாவட்டத்திலிருந்து தொழில்முயற்சியாளர்களான பெண்கள் 100 பேரை தெரிவு செய்து சந்தைப்படுத்தல் முகவர்களாக அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு, கம்பஹா, கண்டி, குருநாகல், காலி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த தொழில்முயற்சியாளர்களான பெண்கள் 762 பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்

## 24.6 அனர்த்த நிலைமைகளின் காரணமாக இடம்பெயரும் பெண்களை இலக்காகக் கொண்ட அனர்த்தங்களின் பின்னரான நிவாரண சேவைகளைச் செய்துகொடுக்கும் “லிய சஹன” நிகழ்ச்சித்திட்டம்

அனர்த்தங்களுக்கு ஆளாகி இடம்பெயர்கின்ற பெண் தொழில்முயற்சியாளர்கள் பேணிவந்த சுயதொழில்வாய்ப்புக்களை பாதுகாத்தல் மற்றும் வருமான உருவாக்க வழிமுறைகளை மீளக் கட்டியெழுப்புவதன் மூலம் அவர்களை பலம்மிக்கவர்களாக மாற்றியமைப்பது இதன் நோக்கமாகும்.

திடீர் அனர்த்த நிலைமைகளின் காரணமாக இடம்பெயந்து களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பெண்களின் தகவல்களைப் பெற்றுக்

கொள்ளல், நான்கு பேர் கொண்ட குழுவை நியமனம் செய்து உரிய முறையியல்கள் மற்றும் வழிகாட்டல்களைத் தயார் செய்தல், சிபாரிசு செய்யப்பட்ட பெயர்ப் பட்டியல்களுக்கு மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளல், அங்கீகரித்தல் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு ஏற்பாடுகளை அனுப்பல், சுயதொழில்வாய்ப்புக்களுக்கான கொடைகளைப் பெற்றுக் கொடுத்தல், நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் பற்றிய கண்காணிப்பு மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளாகும்.

**நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்**

| மாவட்டம் | சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட தொகை (ரூபா) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| களுத்துறை | 16,725,078.00 | 642 |
| இரத்தினபுரி | 14,876,930.00 | 575 |
| மாத்தறை | 19,253,791.00 | 578 |
| காலி | 5,572,620.00 | 261 |
| ஹம்பாந்தோட்டை | 3,615,275.00 | 133 |
| முழு மொத்தம் | 60,043,694.00 | 2,189 |

# 12. தேசிய மகளிர் குழு


## நோக்கு

சமஅந்தஸ்து உறுதி செய்யப்பட்டதும், வன்முறையற்றதுமான பெண்களுக்கு உகந்த ஏற்றதொரு இலங்கைச் சமூகம்

## நிறுவனத்தின் செயற்பணி

இலங்கை பெண்களின் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தல், சமஅந்தஸ்தை உறுதிசெய்தல் மற்றும் பூரண அபிவிருத்திக்கு வழிவகுக்கின்ற கொள்கைகள், சட்டக் கட்டமைப்புக்களை தயார் செய்வதற்கான சிபாரிசுகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் முறையாக அமுல்படுத்த ஊக்குவித்தல், கண்காணிப்புச் செய்து மதிப்பீடு செய்தல்

## நிறுவன ஒழுங்கமைப்பு



# பிரதான செயற்பணிகள்

- பால்நிலைசார் அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வித்தியாசங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், அவதானித்தல் மற்றும் அது சம்பந்தமாக நிருவாக, அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது சபைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றை சமர்ப்பித்தல்.
- அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பெண்களின் சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறுவது தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகள், நிவாரணங்கள், சட்ட உதவிகள் அல்லது மத்தியஸ்தம் செய்கின்ற சேவைகளுக்கு அரசாங்க அல்லது அரசசார்பற்ற அமைப்புகளிடம் சமர்ப்பித்தல்
- இந்த செயற்பாடுகளை ஆய்வு செய்தல், குறித்த நிருவாக அதிகாரிகளிடமிருந்து வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அறிக்கைகளை நாட்டுக்குள் பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் விடயத்தில் சட்ட ரீதியான மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளினால் ஏற்படுகின்ற தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் சமவாயத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள உதவுவதும் அந்த ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மீள திருத்தியமைப்பதற்கான சிபாரிசுகளை சமர்ப்பித்தலும்.
- பெண்களின் அந்தஸ்து தொடர்பாக விடயப்பொறுப்பு அமைச்சரினால் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக அல்லது பொருத்தமானதென குழு சிந்திக்கின்றவாறு செயற்படுவதற்கு அறிவுரை வழங்குதல்.
- பால்நிலைசார் முறைப்பாட்டு நிலையத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவையை குறிப்பிட முடியும் என்பதுடன், கிடைக்கின்ற முறைப்பாடுகளை நிவாரணம், சட்ட உதவி அல்லது மத்தியஸ்தம் செய்யும் சேவைகளுக்காக அரசாங்க அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களிடம் சமர்ப்பித்தல்.

# அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017

## 01. கொள்கைசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

1.1 குடும்ப வன்முறைச் செயற்பாடுகளைத் தடுக்கும் சட்டத்தைத் திருத்தியமைத்தல், குடும்ப வன்முறையைத் தடுக்கும் சட்டத்தின் செயற்றிட்டத்தை இற்றைப்படுத்தல் மற்றும் சட்டம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்

1.1.1 தேசிய மகளிர் குழுவினால் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைச் செயல்களை தடுக்கும் சட்டத்தை சட்டத் துறை வல்லுனர்கள் ஊடாக மீண்டும் திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. இந்த சட்டத்தை அமுல்படுத்தும் போது கிடைத்துள்ள அனுபவங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் இந்தத் திருத்தத்திற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

1.1.2 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைச் செயல்களை தடுக்கும் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்ட செயற்றிட்டம் கல்விமான்கள் குழுவினால் இற்றைப்படுத்தப்பட்டது. கடந்த 10 வருடங்களில் சட்டத்தை அமுல்படுத்தும் போது தெளிவாகியுள்ள சிக்கல்கள் தொடர்பில் இவ்வாறு இற்றைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1.1.3 இவ்வாறு இற்றைப்படுத்தப்பட்ட செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள இந்த அமைச்சின் அலுவலர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக கம்பஹா, இரத்தினபுரி மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

குடும்ப வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டம் பற்றி பொலிஸ் அலுலவர்களை அறிவுறுத்துவதற்கான பயிற்சி மொடியூல் தயார் செய்யப்பட்டு வருகின்றது.
அதற்கமைய பால்நிலைசார் எண்ணக்கருவின் அடிப்படையில் குடும்ப வன்முறை சட்டம் பற்றியும், அதன் சட்ட ஏற்பாடுகள் பற்றியும், பொலிஸின் செயற்பணி ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மொடியுல் தயார் செய்யப்படும்.

### 1.2 அரசாங்க பாடசாலை பாடவிதானத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள நூல்களில் பால்நிலைசார் தன்மை பற்றிய பகுப்பாய்வு

பகுப்பாய்வை மேற்கொண்டு உரிய அறிக்கையை கௌரவ கல்வி அமைச்சரிடம் சமர்ப்பித்த பின்னர், அவரின் அறிவுரையின் பேரில் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள அலுவலர்களுடன் கலந்துரையாடி குறித்த ஆய்வின் சிபாரிசுகளை, பாடப்புத்தகங்களை தயார் செய்யும் போது பயன்படுத்துமாறு விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், தேசிய கல்வி நிறுவகத்தின் பாடப் புத்தகங்களைத் தயார் செய்யும் அலுலவர்களுக்கு பால்நிலைசார் தன்மை பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.3 பிறப்புச் சான்றிதழைத் திருத்தியமைத்தல்

சட்டரீதியாக விவாகம் செய்யாத பெற்றோருக்கு தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்கச் செய்வதிலுள்ள அசௌகரியங்கள் மற்றும் வன்புணர்வுக்கு ஆளான பெண்கள் பிள்ளைகள் பிறக்கும் போது பதிவு செய்வதிலுள்ள பல்வேறு சிக்கல்களை முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதனால் பிள்ளைக்கு உரித்தாக வேண்டிய சமூக, சட்டபூர்வமான அரவணைப்பு மற்றும் பாதுகாப்பு கிடைக்காமை மற்றும் கணவர் இல்லாத பிள்ளைகள் உள்ள விவாவம் செய்யாத பெண்கள் சமூகத்தில் புறக்கணிக்கப்படாது அவர்களின் சமஅந்தஸ்தை உறுதி செய்வதற்காக ‘‘பெற்றோர் விவாகமானர்களா’’ எனும் நிரலை பிறப்புச் சான்றிதழில் இருந்து நீக்குவதற்கு தேசிய மகளிர் குழு பிரேரித்துள்ளது.

மேற்படி பிரேரணைக்கு இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் பால்நிலைசார் அந்தஸ்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் இது சமர்ப்பிக்கப்பட்டது. இது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் கலந்துரையாடப்பட்டது. மேலும் மேற்படி குழுவின் அறிவுரையின் பேரில் இப்பிரேரணைக்கு பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய மகளிர் குழுவினால் அமுல்படுத்தப்பட்டன.

1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவையின் நிகழ்ச்சி
2. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கலந்துரையாடல்
3. டுவிட்டர் மற்றும் முகநூல் சமூக வலையமைப்புக்கள் ஊடாக கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்.
4. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் விபரங்களை வெளியிடல்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பது, பிறப்புச் சான்றிதழின் 6 ஆம் நிரலில் ‘‘பெற்றோர் விவாகமானவர்களா?’’ எனும் நிரலை நீக்குவதற்கு பெரும்பாலானோர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்பதாகும். அதற்கமைய பிறப்புச் சான்றிதழின் 6 ஆம் நிரலை நீக்குவது

பற்றிய தமது கருத்துக்களை துறைசார் மேற்பார்வைக் குழு பொது நிருவாக அமைச்சிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

### 1.4 சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்புரியை உறுதி செய்தல்

வெலிகட சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் மூலம் தெரியவந்திருப்பது பெண்கள் பிரதானமாக சிறைச்சாலைக்குச் சென்றிருப்பது ஹெரோயின் தொடர்பாக நிதி மோசடி, விபச்சாரம், திருட்டு, கொலை ஆகிய காரணங்களினால் என்பதாகும். இங்கு சுமார் 477 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதுடன், வயது 5 முதல் 16 வரையானவர்கள் இங்கு உள்ளனர். அவர்களுக்கு உள்ள வசதிகளும் மிகவும் குறைவாகும்.

- ✓ பிணையைச் செலுத்திக் கொள்ள முடியாது போன பெண்கள் சிறையில், தடுப்புக் காவலில் உள்ளமை.
- ✓ முறையாக சாட்சிகளை சமர்ப்பிக்க முடியாது போனதன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை.
- ✓ நீதிமன்றம், சிறைச்சாலைகளுடன் தொடர்பு இல்லாமை.
- ✓ வழக்குகளைத் தீர்ப்பதற்கு நீண்டகாலம் தாமதம் ஏற்படுதல்.
- ✓ குறைந்த வருமானம் பெறுகின்ற பிரதிவாதிகளுக்கு சட்ட உதவி பெற்றுக் கொள்ள முடியாதுள்ளமை.
- ✓ அவ்வாறே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விடயங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான பின்னணி இல்லாமை.

எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்களுக்கு ஏதும் சாதகமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பிரேரிக்கப்படவுள்ளன.

### 1.5 இலங்கையில் முறைசாரா துறையில் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெண்களின் சமூகப் பாதுகாப்பு முறையியல்கள் தொடர்பில் மேற்கொள்ளும் ஆய்வு

இலங்கையில் முறைசார் துறை மற்றும் முறைசாரா துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்காக இன்று காணப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு முறையியல்களை ஒப்பிடல் மற்றும் முறைசாரா துறையில் பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பு கொள்கைகளைத் தயார் செய்வதற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையின் 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 9 மாவட்டங்கள் தெரிவு செய்துகொள்ளப்பட்டன. இதன் போது அவ்வவ் மாகாணத்திற்கு உரித்தான முறைசாரா துறைக்கு கூடுதல் விகிதத்தில் பங்களிப்புச் செய்கினற் மாவட்டம் ஆய்வுக்குத் தெரிவு செய்துகொள்ளப்பட்டது. ஆய்வின் தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.6 தேசிய மகளிர் குழுவின் மாதாந்தக் கூட்டம்.

இது தேசிய மகளிர் குழுவின் செயற்பணி பற்றி ஆராயும் பொருட்டு மாதாந்தம் நடாத்தப்படுகின்ற குழுக்கூட்டமாகும். இதன் பிரதான நோக்கம் பெண்களின் அபிவிருத்திக்கான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தற்போது நிலவுகின்ற முரண்பாடுகளை குறைத்தல் மற்றும் சமஅந்தஸ்தை உறுதி செய்வதாகும். அதற்குத் தேவையான கலந்துரையாடல்கள் தேசிய மகளிர் குழுவின் அங்கத்தவர்களின் பங்கேட்புடன் மாதாந்தம் நடாத்தப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 2. பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலை தடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### 2.1 குழுக் கலந்துரையாடல்கள்

#### 2.1.1 பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான சமவாயம் மற்றும் சீடோ அவதானிப்புக்கள் பற்றி அலுவலர்களை அறிவுறுத்தும் குழுக் கலந்துரையாடல்

பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான சமவாயம் தொடர்பாக மற்றும் அவதானிப்புக்கள் பற்றி அரச துறையின் மற்றும் அரசசார்பற்ற துறைகளின் பங்கேட்புடன் இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.




செயலாளர் விளக்கமளிக்கையில் குழுக் கலந்துரையாடலில் பங்கேற்றோர்

#### 2.1.2 முதியவர்களான பெண்களின் நலன்புரி பற்றிய குழுக் கலந்துரையாடல்

2012 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வீடமைப்பு பற்றிய கணக்கெடுப்பின் தரவுகளுக்கு அமைய மொத்த சனத்தொகையில் 5.6% ஆக காணப்படுகின்ற முதியோரான பெண்களின் தற்போதைய நிலைமை, அது பற்றிய அரச மற்றும் சிவில் சமூகங்களின் செயற்பணிகள்,

முதியோரான பெண்களின் சிக்கல்கள் மற்றும் அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிடல் பற்றிக் கவனம் செலுத்தும் நோக்கத்துடன், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன அலுவலர்களின் பங்கேட்புடன் 2017.07.04 ஆம் திகதி இந்தக் குழுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

இதன் போது முதியோரான பெண்களின் தற்போதைய நிலைமை, முதுமை மற்றும் உளவியல் சுகாதாரம் தொடர்பில், முதிய பெண்கள் எதிர்நோக்கும் சுகாதார சிக்கல்கள், முதியோரான பெண்கள் - கலாசார மற்றும் சமூக சூழல் மற்றும் முதியோரான பெண்களின் நலன்புரி தொடர்பிலான அரசின் செயற்பணி போன்ற விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

### 2.1.3 சுற்றாடலை பாதுகாப்பதற்காக பெண்களை வலுவூட்டுவது தொடர்பில் நடாத்தப்பட்ட குழுக் கலந்துரையாடல்

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் தேசிய மகளிர் குழுவினால் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பெண்களை வலுவூட்டுவது தொடர்பிலான கலந்துரையாடல் 2017 அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை பத்தரமுல்லை செத்சிறிபாய கட்டம் 2 இல் நடாத்தப்பட்டது.

தற்போது இலங்கையில் காணப்படுகின்ற உக்கிரமான சுற்றாடல் சிக்கலான கழிவுப் பொருள் முகாமைத்துவம், டெங்கு நோய், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகிய தலைப்புக்களை மையமாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன், இந்தத் தலைப்புக்கள் தொடர்பில் மொத்த சனத்தொகையில் 52% ஆக உள்ள இலங்கை பெண்கள் பங்களிப்பு வழங்கக்கூடிய முறை பற்றி ஆராய்வது இந்தக் கலந்துரையாடலின் பிரதான நோக்கமாகும்.

## 2.2 இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள்

இனப்பெருக்க சுகாதாரம் பற்றி பொது மக்களை அறிவுறுத்துவதற்காக குடும்ப சுகாதார பணியகமும், தேசிய மகளிர் குழுவும் இணைந்து ஒரு மொடியூலைத் தயார் செய்துள்ளன. மேற்படி மொடியூலைப் பயன்படுத்தி மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் ஆலோசனை அலுவலர்களை அறிவுறுத்துவதன் மூலம் கிராமிய மட்டத்தில் மக்களை அறிவுறுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பயிற்சிச் செயலமர்வின் போது கட்டிளமைப் பருவம், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம், உடல் அங்கங்களை இனங்காணல், குறைந்த வயதில் கர்ப்பமடைவதும், அதன் விளைவுகளும், குடும்பக் கட்டுப்பாடு, ஆரோக்கியமான பிள்ளையொன்றை பெற்றெடுத்தல் மற்றும் இதற்குக் காணப்படுகின்ற சேவைகள் ஆகிய விடயங்களின் ஊடாக அலுவலர்கள் அறிவுறுத்தப்படுவதுடன், அவர்களின் கடமைகளில் எழுகின்ற சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும் முறை பற்றியும் அறிவுறுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் மேல், வடமத்தி மற்றும் மத்திய மாகாணங்களில் ஏற்கெனவே நடாத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய மாகாணங்களிலும் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது.

**2.3 சேவை நிலையங்களில் துன்புறுத்தலை தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்**

அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு தமது சேவை நிலையங்களில் ஏற்படுகின்ற துன்புறுத்தல்களை குறைப்பதற்காக பெண்களுக்கு உள்ள சவால்கள், துன்புறுத்தல் என்றால் என்ன, இணையத்தளத்தில் ஏற்படுகின்ற மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்கள் பற்றி, பொதுக் போக்குவரத்தின் போது பெண்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகும் முறை, துன்புறுத்தலுக்கு ஆளாகின்ற சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைள் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய முறை மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் தொடர்பில் செயற்பட்டு வருகின்ற நிறுவனங்கள் பற்றி அறிவுறுத்துவதும் இதன் போது மேற்கொள்ளப்படுகின்றது.




சேவை நிலையங்களில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களைத் தடுப்பது தொடர்பில் பொல்கஹவெலயில் நடாத்தப்பட்ட செயலமர்வு

**2.4 பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பது பற்றிய சர்வதேச 16 நாள் நிகழ்ச்சித்திட்டம்**

பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான துன்புறுத்தல்களையும் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் 16 நாள் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலைக் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டம் நவம்பர் மாதம் 25 முதல் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. அதற்கமைய 16 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் துன்புறுத்தலுக்கு ஆளாகின்ற பெண்களுக்குள்ள சட்டரீதியான நிவாரணங்கள் பற்றி விழிப்புணர்வூட்டல், முறைப்பாட்டு நிலையம் மற்றும் 1938 பெண்கள் உதவித் தொலைபேசிச் சேவை பற்றி சமுதாயத்தை அறிவுறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு பல்வேறு வகையிலுமான சேவைகளை ஆற்றும் நோக்கத்துடன், புத்தளம் மாவட்டத்தில் நடமாடும் சேவையொன்றை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது

# 3. பால்நிலைசார் பிரதானப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

## 3.1 பால்நிலைசார் எண்ணக்கரு பற்றி தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களில் மாகாண சபை அலுவலர்களை பயிற்றுவித்தல்

பால்நிலைசார் எண்ணக்கருவின் அடிப்படையில் மாகாண சபை அலுவலர்கள் கவனம் செலுத்த வேண்டிய துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தல், மாகாண சபைகளுடன் எதிர்கால அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் முறையை சரியாக திட்டமிடல், மாகாண மகளிர் அலுவல்கள் அமைச்சுடனான தொடர்பை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. 08 மாகாணங்களின் மாகாண சபைகளின் திட்டமிடல் அலுவலர்கள் 50 பேரின் பங்கேட்புடன் யூலை மாதம் 31 மற்றும் ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதிகளில் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவகத்தில் நடாத்தப்பட்டது.





அலுவலர்களை அறிவுறுத்தும் செயலமர்வு

## 3.2 மீளக் கட்டியெழுப்பல் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பால்நிலைசார் பிரதானப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் அமைப்புடன் செய்துகொண்டுள்ள 1325 உடன்படிக்கை தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய நடவடிக்கைகளின் போது பால்நிலைசார் பிரதானப்படுத்தல் இதன் முக்கிய நோக்கமாகும். இது தொடர்பில் செயற்பட்டு வருகின்ற தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் மீள்இணக்க அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சில் பால்நிலைசார் தன்மை தொடர்பில் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அமைச்சுக்களின் நிகழ்ச்சித்திட்டங்களில் பால்நிலைசார் தன்மை உள்ளடக்கப்பட்டுள்ள முறை பற்றி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் மாகாண சபைகளை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட பால்நிலைசார் பிரதானப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றமும் மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

### 3.4 பால்நிலைசார் துன்புறுத்தல் தரவுக் கட்டமைப்பு

பால்நிலைசார் துன்புறுத்தல் தரவுக் கட்டமைப்புக்கு தரவுகளைப் பெற்றுக் கொடுப்பதானது தேசிய மகளிர் குழுவின் 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையத்தினூடாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2017 ஏப்ரல் மாதம் 1938 மற்றும் முறைப்பாட்டு நிலைய அலுவலர்களுக்கு தரவுகளை நேரடியாக கணினிக் கட்டமைப்புக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தரவுக் கட்டமைப்புக்கு தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு கொழும்பு மாவட்டத்தின் சகல அமைச்சு அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள் மற்றும் தரவுக் கட்டமைப்புடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. அதற்கமைய 2017 யூலை மாதம் முதல் கொழும்பு மாவட்ட தரவுகள், இந்த தரவுக் கடடமைப்பில் உட்புகுத்தப்பட்டு வருகின்றன.

## 4. அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

### 4.1 அரசியலில் பெண்களை வலுவூட்டும் சான்றிதழ் பாடநெறிகளை நடாத்தல்

பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான பட்டயம் மற்றும் இலங்கை மகளிர் சமவாயத்திற்கு அமைய பெண்களை அரசியல் ரீதியாக வலுவூட்ட வேண்டியதன் தேவையின் அடிப்படையில் தேசிய மகளிர் குழுவினால் பல வருடங்களாக அரசியலில் பெண்களை வலுவூட்டும் டிப்ளோமா /சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன. மேலும் 2017 ஆம் ஆண்டு முதல் பேராதனை பல்கலைக் கழகத்துடன் இணைந்து இப்பாடநெறிகளை நடாத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பெண்களும், வளவாளர்களும்

### 4.2 அரசியல் துறையில் ஈடுபடுகின்ற மற்றும் பிரவேசிக்க விரும்பும் பெண்களின் தொடர்பாடல் திறமைகளை வளர்க்கும் பயிற்சிச் செயலமர்வு

தேர்தல்களில் போட்டியிடுகின்ற பெண் பிரதிநிதிகள் அதில் வெற்றிபெற்று அரசியல் துறையில் பிரவேசிப்பதற்கும், கொள்கைகளை வகுக்கும் போது விளைதிறன்மிக்க மற்றும் ஆக்கபூர்வமான பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கும் பெண் தலைவிகளின் தொடர்பாடல் திறன்களை வளர்ப்பதன் மூலம் அரசியல் துறையில் பிரவேசிக்கும் பெண்களின் தரத்தை வளர்ப்பதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.
அதற்கமைய தொடர்பாடல் திறமைகளை மேம்படுத்தல் மற்றும் தேவையான நடைமுறைசார் மற்றும் கோட்பாடு ரீதியான அறிவை பெற்றுக் கொடுப்பதற்குரிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் பிரதான அரசியல் கட்சிகளின் கொழும்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் 45 பேரின் பங்கேட்புடன் IFES நிறுவனத்தின் வளப் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது.

### 4.3 பெண்களின் அரசியல் பங்கேட்பை விஸ்தரிப்பதற்காக மகளிர் அபிவிருத்தி அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

பெண்களின் அரசியல் பங்கேட்பை விஸ்தரிப்பதற்கு வாக்காளர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் வாக்காளர் என்ற வகையில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் பற்றி மற்றும் பால்நிலைசார் உணர்வுப்பூர்வமான தன்மையுடன் கொள்கைக்கு மதிப்பளிக்கின்ற மக்கள் பிரதிநிதியொருவரை சரியாக தெரிவுசெய்து கொள்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவுறுத்துவதை நோக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுகின்றது. இதுவரை 03 நிகழ்ச்சித்திட்டங்கள் தென் மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணம் மற்றும் பதுளை மாவட்டத்தில் நடாத்தபட்டுள்ளன.

## 5. தேசிய மகளிர் குழு மேற்கொண்டுள்ள ஆய்வுகளின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

### 5.1 சைபர் குற்றச்செயல்கள் பற்றிய ஆய்வின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

தற்போது அமுலில் உள்ள சைபர் குற்றச் செயல்கள் தொடர்பிலான சட்டத்தைத் திருத்தியமைத்தல் மற்றும் பதிய சட்டங்களை அறிமுகம் செய்வதற்கும், சைபர் குற்றச் செயல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் தற்போது அமுலில் உள்ள சட்டம் பற்றி சமூகத்தை அறிவுறுத்துவது இதன் நோக்கமாகும்.

இதன் போது சைபர் குற்றச் செயல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களின் பங்கேட்புடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு தரவுகளைச் சேகரிப்பதற்கு முறையான மாதிரிப்படிவமொன்று தயார் செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு, மொடியூல் ஒன்றைத் தயார் செய்து, சைபர் குற்றச்செயல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்ற பொலிஸ்

அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒத்துழைப்புடன் தேசிய மகளிர் குழுவின் அலுவலர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.





கலந்துரையாடலில் பங்கேற்ற அலுவலர்கள் அதன் போது கருத்து வெளியிடுகையில்

## 5.2 தோட்டத்துறையில் காணப்படுகின்ற பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் பற்றிய ஆய்வின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

பதுளை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் மூலம் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களுக்குக் காரணமாகும் சிக்கல்கள் இனங்காணப்பட்டு, மேற்படி சிக்கல்களைத் தடுப்பதற்கு இந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு சிபாரிசுகள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு தேசிய மகளிர் குழு பெருந்தோட்ட மனித அபிவிருத்திப் பொறுப்புடன் கலந்துரையாடி தற்போது கருத்திட்டத் திட்டமொன்றைத் தயார் செய்துள்ளது. முதலில் முன்னோடிகக் கருத்திட்டமாக ஹப்புத்தளை தோட்டத்தை மையமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

## 5.3 சிறுவர் தாய்மார் பற்றிய ஆய்வின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் மூலம் எழுந்தள்ள சிபாரிசுகளுக்கு அமைய, கட்டிளமைப் பருவ இளைஞர், யுவதிகளுக்கு இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நியதிச்சட்ட வன்புணர்வு தொடர்பான சட்டங்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

மேலும், தரம் ஆறு முதல் இனப்பெருக்க சுகாதாரம் பற்றி பாடசாலை பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கும் கொள்கை வகுப்பாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. குடும்ப சுகாதாரப் பணியகத்துடன் இணைந்து மொடியுல் ஒன்று தயார் செய்யப்பட்டு இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 6. ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்

### 6.1 ''காந்தா பிரபோதய'' எனும் வானொலி கலந்துரையாடல் நிகழ்ச்சித்தொடர் 2017

பெண்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு சிக்கல்கள் குறிப்பாக பால்நிலைசார் துன்புறுத்தல்கள் சம்பந்தமான விடயங்கள் பற்றி நேயர்களை அறிவுறுத்தும் நோக்கத்துடன் ''காந்தா பிரபோதய'' எனும் வானொலி நிகழ்ச்சித்திட்டம் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. நேயர்களை அறிவுறுத்தல் மற்றும் அவர்களின் சிக்கல்களுக்குப் பதிலளிப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தக் கலந்துரையாடலின் மூலம் பொது மக்களை விழிப்புணர்வூட்டல், அதன் மூலம் சமூகத்தில் அன்றாடம் ஏற்படுகின்ற சிக்கல்களைக் குறைத்துக் கொள்ளல் மற்றும் தடுத்துக் கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. சிங்கள மொழி மூலமான ஊடக நிகழ்ச்சிகள் 08 உம், தமிழ் மொழி மூலமான ஊடக நிகழ்ச்சிகள் 04 உம் ஒலிபரப்பப்பட்டுள்ளன. மேலும் 04 நிகழ்ச்சிகளை எதிர்காலத்தில் ஒலிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.2 சத்துட்டு பவுல எண்ணக்கரு பற்றிய குறுந் திரைப்பட திரைக்கதை போட்டி

துன்புறுத்தல்கள், துஷ்பிரயோகம், துர்நடத்தை, வன்புணர்வு, தற்கொலை மற்றும் தகாத உறவுகள் காரணமாக குடும்பங்கள் சீர்குழைதல் போன்ற விடயங்களை குறைக்கும் வகையில் மகிழ்ச்சிக் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு சுறுந் திரைப்படமொன்றை தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.3 பெண்கள் தொடர்பில் வெகுசன ஊடகங்களில் நற்பெயரை கட்டியெழுப்புவதற்கான ஊடக கலந்துரையாடல்

சமூகத்தில் பெண் தொடர்பில் உணர்வுப்பூர்வமானதன்மை மற்றும் சாதகமான மனப்பாங்கை கட்டியெழுப்புவதன் மூலம் பெண்கள் தொடர்பில் ஊடகங்களில் நற்பெயரைக் கட்டியெழுப்பல், பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலைக் குறைத்தல், பெண்கள் தொடர்பில் ஊடகங்கள் மூலம் பல கருத்துக்கள் சமூகமயப்படுத்தப்படுவதனால் நல்லதொரு ஊடக கொள்கையைத் தயார் செய்யும் நோக்கத்துடன் ஊடகத் துறையில் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களில் உள்ள அலுவலர்களை தொடர்புபடுத்திக் கொண்டு செப்தெம்பர் மாதம் இந்த ஊடக கலந்துரையாடல் வெகுசன ஊடக அமைச்சுடன் இணைந்து நடாத்தப்பட்டுள்ளது.

### 6.4 வனிதா விபவ எனும் காலாண்டு சஞ்சிகையை அச்சிடுதல்

பெண்களின் அபிவிருத்தி மற்றும் அவளின் தனித்துவத்தை தொணிப்பொருளாகக் கொண்ட ஆக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தல், ஆக்கபூர்வமான திறமைகளை வளர்த்தல் மற்றும்

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்துடன், ''வனிதா விபவ'' இதழ்கள் நான்கு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.


### 6.5 பிரகத்தியே ஹவுல்கருவோ சஞ்சிகையை அச்சிடுதல்

பெண்கள் தொடர்பிலான நடப்பு விவகார தலைப்புகளுக்கு அமைய கலைத்துவ கருத்துக்களைச் சேகரித்தல், நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளை வளர்த்தல், கலை ரீதியான தொகுப்பொன்றாக வாசகர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வகையில் பிரக்கத்யே ஹவுல்கருவோ எனும் சஞ்சிகை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

## 7. முறைப்பாட்டு நிலையம் மற்றும் 1938 பெண்கள் உதவித் தொலைபேசிச் சேவை

### 7.1 பால்நிலைசார் அடிப்படையிலான முறைப்பாட்டு நிலையம்

பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறிப்பாக துன்புறுத்தலுக்கு ஆளாகின்ற பெண்களுக்கு இதன் மூலம் முறைப்பாடு செய்து நிவாரணம் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய பெண்களின் உரிமை மீறல்களின் போது அவ்வாறான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கும், அவற்றை விசாரணை செய்து பரிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக உரிய அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களிடம் சமர்ப்பிப்பதற்கும், தேவையான சந்தர்ப்பங்களில் சட்டம் மற்றும் ஆலோசனை போன்ற நிவாரணச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், சட்டத்தரணிகளின் உதவியும் இந்த முறைப்பாட்டு நிலையத்திலிருந்து சேவை பெறுநர்களுக்கு உரித்தாகும்.
நாட்டின் எந்தவொரு பிரதேசத்தினதும் பெண்கள் மற்றும் ஆண்கள் இந்த நிலையத்திற்கு வருகைதந்து அல்லது கடிதம் மூலம் தொலைபே அல்லது பெக்ஸ் மூலம், மின்னஞ்சல் மூலம் தமது தாய் மொழியிலேயே முறைப்பாட்டைச் செய்ய முடியும். பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், குடும்பப் பிணக்குகள், பராமரிப்பு பற்றி சிக்கல்கள், தொழில் நிலையங்களில் இடம்பெறுகின்ற சிக்கல்கள் உட்பட பல்வேறு துறைகளிலும் பெண்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்களை இந்த முறைப்பாட்டு நிலையத்தில் சமர்ப்பிக்கும் வாய்ப்பு எந்தவொரு சேவை பெறுநருக்கும் கிடைக்கும். இந்த முறைப்பாட்டு நிலையத்திற்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அழைத்து மத்தியஸ்தம் செய்தல், ஆலோசனை மூலம் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள உதவுதல், சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் போன்ற செய்றபாடுகள் மேற்கொள்ளப்படும். தற்போது முறைப்பாட்டு நிலையத்திற்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளில் அதிகரிப்பு காணப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு 293 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.




### 7.2 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை

பால்நிலைசார் அடிப்படையில் துன்புறுத்தலுக்கு ஆளாகின்ற பெண்கள் தொடர்பில் முறைப்பாட்டு நியலைத்தினை விஸ்தரிக்கின்றதொரு கருத்திட்டமாக 1938 உடனடி அழைப்பு இலக்கத்தின் கீழ் மகளிர் உதவித் தொலைபேசிச் செவை 2014 மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டது.


மகளிர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் முறைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், மு.ப. 8.30 முதல் பி.ப. 5.15 வரை கடமை நாட்களில் மாத்திரம் இது செயற்படும். தமது சிக்கலைத் தெரிவிக்கும் பட்சத்தில் அது பற்றிய தகவல்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு அவை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படும். அதற்கமைய பொலிஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக ஒழிப்பு பணியகம், சட்ட உதவி ஆணைக்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், உரிய பிரதேச செயலகம், வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகம் போன்ற சந்பந்தப்பட்ட நிறுவனங்களிடம், இவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இந்த அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு சேவைகளை செய்துகொடுத்தல் மற்றும் சட்ட சிக்கல்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் சட்ட ஆலோசனைகளை நேரடியாகப் பெற்றுக் கொடுப்பதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படும். சிக்கல்கள் வேறு நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அவர்களுடன் தொடர்புகொண்டு துன்புறுத்தலுக்கு ஆளான நபருக்கு

நிவாரணம் வழங்கும் வரை பின்னாய்வு செய்வதும் மற்றொரு சேவையாகும். அதற்கமைய இந்த சேவைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் 398 முறைப்பாடுகளும், 2015 ஆம் ஆண்டில் 777 முறைப்பாடுகளும், 2016 ஆம் ஆண்டில் 1382 முறைப்பாடுகளும், 2017 ஆம் ஆண்டில் 1204 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

1938 மகளிர் தொலைபேசி உதவிச் சேவைக்கு கிடைத்த முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்ககள்

| | |
|---|---|
| பிரதேச செயலகங்கள் | 179 |
| பொலிஸ் | 63 |
| சட்ட உதவி ஆணைக்குழு | 90 |
| உள்ளக | 827 |
| ஏனைய நிறுவனங்கள் | 19 |




### 7.2.1 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையத்தின் அலுவலர்களுக்கான மனஅழுத்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையத்தை வலுவூட்டல் மற்றும் சேவை பெறுநர்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் விளைதிறன்மிகக் சேவையை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அதன் அலுவலர்களுக்கான மனஅழுத்த முகாமைத்துவம் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் சட்ட அலுவலர்கள், முறைப்பாட்டு நிலையத்தின் அலுவலர்கள், 1938 இன் பதவியணியினர், தரவுக் கட்டமைப்பு சம்பந்தமான அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




ஹொரனை நேசர் லவர் விடுதியில் நடாத்தப்பட்ட மனஅழுத்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

## 8. சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சித்திட்டம்

**பெண்களின் குரலை உயிர்பெறச் செய்யும் பேரணி**

2017 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் ஒட்டுமொத்த இலங்கைப் பெண்களின் நலனுக்காக அதற்குப் புதுப்பொழிவூட்டும் நோக்கத்துடன் பெண்களின் குரலை உயிர்பெறச் செய்யும் பேரணியொன்று 2017 மார்ச் மாதம் 01 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இது இலங்கையின் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் இலக்காகக் கொண்டு 25 மாவட்டங்களிலும் புதுப் பொழிவுடன் நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் 7000 இற்கும் மேற்பட்டோர் அறிவுறுத்தப்பட்டனர்.




2017.03.01 ஆம் திகதி நடாத்தப்பட்ட பெண்களின் குரலை உயிர்பெறச் செய்வோம் பேரணியில் கௌரவ மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர், பிரதம அமைச்சரின் பாரியார் திருமதி மைத்திரி விக்ரமசிங்க அவர்கள், கௌரவ வெளிவிவகார அமைச்சர் தலதா அத்துகோரள அவர்கள், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி சந்திராணி சேனாரத்ன, மேலதிச் செயலளர் (அபிவிருத்தி) மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் தூதுவர் செல்வி ஜயந்தி குருஉதும்பல ஆகியோர் கலந்துகொண்ட போது




பேரணியில் கலந்துகொண்டவர்கள்

# 13. சிறுவர் செயலகம்


## நோக்கு

உடல், உளவியல் சமூக மற்றும் அறிவாற்றல் அபிவிருத்தியைக் கொண்ட இலங்கை முன்பள்ளிப் பருவ சிறுவர் சமூகமொன்றை உருவாக்குதல்.

## செயற்பணி

தேசிய மட்டத்திலான கேந்திர நிறுவனம் என்ற வகையில் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல், பின்னாய்வு செய்வதன் ஊடாக இலங்கையின் சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதிசெய்தல்.

### சிறுவர் செயலகத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு



# பிரதான நோக்கங்கள்/ செயற்பணிகள்

- முன்பள்ளிப் பருவ உபசரணை மற்றும் அபிவிருத்தி பற்றிய கொள்கையை தயார்செய்தல், அமுல்படுத்தும் பொறிமுறையாக செயற்படுதல்
- அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும், வலையமைப்புச் செய்வதும்
- முன்பள்ளிப் பருவ உபசரணை, அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரவுகளை சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயார் செய்தல்.
- முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி தொடர்பில் ஏற்புடையதாகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்வதும் அபிவிருத்தி செய்வதும்.

# அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017

## 01. கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு ரூபா /20஌000ஆன போசாக்குக் கொடுப்பனவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கர்ப்பகாலத்தில் மற்றும் ஒவ்வொரு பாலூட்டும் தாய்க்கும் தேவையான போசாக்குப் பதார்த்தங்களைக் கொண்ட ரூபா -/2஌000பெறுமதிமிக்க போசாக்குப் பொதியாக சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகததில் பதிவு செய்துள்ள ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்க்கும் இந்தக் கொடுப்பனவு 10 மாதங்களுக்கு (கூப்பன்கள் மூலம்) 2016 ஏப்ரல் மாதம் வரை உரித்தானது. எனினும் தாய்மாருக்கு சிபாரிசு செய்யப்பட்ட உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதை இலகுபடுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதை இலகுபடுத்தும் நோக்கத்துடன், கடந்த ஆண்டு மே மாதம் முதல் கூப்பன்களுக்குப் பதிலாக வவுசர்களை வழங்கும் புதிய முறையியல் அறிமுகம் செய்யப்பட்டது.

இதன் கீழ் ரூபா 2000 பெறுமதிமிக்க 10 வவுசர்கள் ஒரே தடவையில் பெற்றுக் கொடுக்கப்படும். கர்ப்பகாலத்தின் இறுதி ஆறு மாதங்கள் மற்றும் பாலூட்டும் முதல் 04 மாதங்களுக்கு மேற்படி போசாக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஆண்டில் இதற்கொன ரூ.மி. 5500 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை செய்யப்பட்டுள்ள செலவினம் ரூ.மி. 5,408,109 ஆகும். அதற்கமைய சுமார் 2,703,881 போசாக்குப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு முதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக டிஜிரல் முறையியலுக்கு அமைய மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு வருவதுடன் இந்த ஆண்டு நவம்பர் மாதமளவில் பதுளை, கொலன்னாவ, திஹகொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அது தொடர்பிலான முன்னோடிக் கருத்திட்டத்தை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 02. பாலர் பாடசாலை மாணவர்களுக்கு / முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்டிருந்த பாலர் பாடசாலை மாணவர்கள் /முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு பசும்பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் போசாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
பாலர் பாடசாலை வயதிலுள்ள குறைந்த குறையைக் கொண்ட பிள்ளைகளின் போசாக்கு நிலைமையை மேம்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டம் அடிப்படை நோக்கமாகும் என்பதுடன் பிள்ளைகள் பாலர் பாடசாலைக்கு வருவதற்கான ஊக்கத்தை ஏற்படுத்தல், பாலர் பாடசாலை வயது முதல் சுகாதார ரீதியான பழக்க வழங்கங்களை ஏற்படுத்தல், வறிய குடும்பங்களுக்கு பொருளாதார நலன்களை செய்துகொடுத்தல் மற்றும் பூரண அபிவிருத்தியின் ஊடாக நாட்டில் மனிதவள

அபிவிருத்தியில் அரச துறையின் பங்களிப்புப் பற்றி மக்களை விழிப்புணர்வூட்டல் போன்றன இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

சுகாதார அமைச்சு மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்களின் தரவுகளுக்கு அமைய குறைந்த நிறையைக் கொண்ட பிள்ளைகள் கூடுதலாக வசிக்கின்ற சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவுகளில் போசாக்கு மட்டம் குறைந்த நிலையில் உள்ள பிள்ளைகள் கல்வி பயில்கின்ற முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அதற்கமைய நாட்டின் 206 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2050 பாலர் பாடசாலைகளில் 51,213 பிள்ளைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதிபெற்றுள்ளனர். 2017 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த ஆண்டின் இறுதி வரை பாலர் பாடசாலை மாணவர்கள் 49,320 பேர் இதன் பயனாளிகளாக பயனடைந்துள்ளனர். இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.மி. 166,747 ஆகும்.





**பாலர் பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

## 03. போசாக்கு பற்றி பாலர் பாடசாலை ஆசிரியைகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

இந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள பாலர் பாடசாலை / முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு அதன் முக்கியத்துவம் மற்றும் போசாக்கு பற்றி பாலர் பாடசாலை ஆசிரியைகளை அறிவுறுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். அதற்கமைய, நிகழ்ச்சித்திடம் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 215 ஐ நடாத்துவதற்கான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காக 2.15 மி.ரூ. ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியளவில் மேற்படி தொகையில் ரூ.மி. 1.866 ஆன தொகை செலவிடப்பட்டு 100% நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 04. சிறுவர்களுக்கு பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான மாலைநேர அரவணைப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

2014 ஆம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களை துன்புறுத்துவதை தடுப்பது பற்றிய கருத்திட்டத்தின் கீழ் (ரூ.மி. 700) பாலர் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பௌதீக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 07 பகல்நேர பராமரிப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய, கிளிநொச்சி, பொலன்னறுவை, மாத்தளை, மட்டக்களப்பு, நுவரெலியா, மொனராகலை, மற்றும் அநுராதபுரம் ஆகிய பகல்நேர பராமரிப்பு நிலையங்களின் நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு பாணந்துறையில் பிரதேச செயலாளர் பிரிவை மையமாகக் கொண்டு மற்றொரு பகல்நேர பராமரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டு பகல்நேர பராமரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக ரூ.மி. 20 ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதில் ரூ.மி. 17.214 புதிய பகல்நேர பராமரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி, ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பதுளை, கம்பஹ ஆகிய மாவட்டங்களில் புதிதாக 02 பகல்நேர பராரிப்பு நிலையங்களும், தெஹியோவிட்ட, தம்புளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரண்டிலும் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் 02 ஐ நிர்மாணிக்கத் தேவையான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, இதன் முன்னேற்றம் ரூ.மி. 15,429 ஆகும்.







**மட்டக்களப்பு பகல்நேர பராரிப்பு நிலையத்தை ஆரம்பித்து வைத்தல்**

## 05. லமா திறிய பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு ரூபா -/250வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

பாலர் பாடசாலை / சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் சேவைகளை மென்மேலும் பலப்படுத்துவதையும், மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு 2015 வரவு செலவுத்திட்ட பிரேரணைகளின் கீழ் பாலர் பாடசாலைகள் /முன்பராய அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியைகளுக்கு ரூபா -/250ஆன கொடுப்பனவை வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதிவரை தகைமைபெற்ற ஆசிரியைகள் 499பருக்கு ரூ.மி.

16.819 ஆன ஏற்பாடுகள் குறித்த மாவட்ட செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விடுவிக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூ.மி. 16.099 இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்டது.

## 6. முன்பள்ளிப்பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

இதன் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூ.மி. 65 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

### 6.1 “செனஹ தடாக” வீடுகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கியமான நோக்கம் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட சூழல் மற்றும் வீட்டில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் போது சிறுவர்களை தொடர்புபடுத்திக் கொள்வதனூடாக அவர்களில் ஒட்டுமொத்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகும். பிரதேச செயலக மட்டத்தில் பெற்றோரை அறிவுறுத்தல், அரச அலுவலர்களை அறிவுறுத்தல், இளைஞர் குழுக்களை அறிவுறுத்தல் போன்ற பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 324 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 1.31 ஆகும் என்பதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை 310 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 1.175 ஆகும்.
அத்துடன் இதன் கீழ் மாவட்ட மட்டத்திலான 25 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூ.மி. 0.356 ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டு இறுதி வரை 22 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.313 ஆகும்.




**அரச அலுவலர்கள் மற்றும் பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

### 6.2 மாவட்ட மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள்

இதுவரை இடம்பெற்றுள்ள மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் 2017 ஆம் ஆண்டு முதல் மாவட்ட மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் என்ற வகையில் அதன் செயற்பணி விஸ்தரிக்கப்பட்டது. அதற்கமைய, ஒவ்வொரு பொறுப்புவாய்ந்த பிரிவினதும் பங்கேற்புடன் சிறுவர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்காக 2017 ஆம் ஆண்டு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் அளவு ரூ.மி. 0.75 ஆகும். அதற்கமைய 2017 செப்தெம்பர் மாத இறுதி வரை 62 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதற்கு ரூ.மி. 0.571 செலவிடப்பட்டுள்ளது.

### 6.3 முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய /பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களை நடாத்தல் .

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய 2004 தேசிய கொள்கைக்கு அமைய முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய மற்றும் பிரதேசக் குழுக்களை நடாத்தும் பொருட்டு ரூ.மி. 1.163 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய தேசிய மட்டத்திலான 4 குழுக்களும், பிரதேச மட்டத்திலான 569 குழுக்களும் மற்றும் மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் 08 உம் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் செலவினம் ரூ.மி. 0.7345 ஆகும்.

### 6.4 முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுலவர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.

வெளிக்களத்தில் கடமையாற்றிவருகின்ற மாவட்ட முன்பள்ளிப் பருவ ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றி வருகின்ற முன் பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவியாளர்களின் மாவட்ட மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 139 உம், மாகாண மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 07 உம், தேசிய மட்டத்திலான கூட்டங்கள் 04 உம் நடாத்தப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூ.மி. 0.7345 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.





**மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்**

**6.5 முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களின் வருடாந்த மாநாடு**

நாடு முழுவதிலும் மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களுக்கு சிறுவர் செயலகத்தின் வருடாந்த செயற்றிட்டத்தை அறிமுகம் செய்தல், மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை மென்மேலும் வினைத்திறனும், விளைதிறனும்மிக்கதாக்குவது போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த வருடாந்த மாநாடு 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் கொழும்பில் நடாத்தப்பட்டது. இதற்காக ரூ.மி. 0.382 ஒதுக்கப்பட்டதுடன், மேற்படி தொகை ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது.

**6.6 முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கையை மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்**

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு, அபிவிருத்தி தொடர்பாக 2004 இல் வெளியிடப்பட்ட தேசிய கொள்கை தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த தேசிய கொள்கையை தற்காலத்தின் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு தேவைகளுக்கு ஏற்றவாறு திருத்தியமைத்து மீள அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இதற்காக உரிய தரப்பினர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு வருவதுடன், அதன் பின்னர் இந்தத் தேசிய கொள்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**6.7 முன்பள்ளிப் பருவ அரவணைப்பு பற்றிய வலையமைப்பைப் பேணிவருதல்**

இலங்கையில் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தொடர்பாக செயற்பட்டு வருகின்ற அரச, அரசார்பற்ற மற்றும் தனியார் துறை நிறுவனங்களையும், ஆட்களையும் தொடர்புபடுத்திக் கொண்டு முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய வலையமைப்பு )ECCD Network) சிறுவர் செயலகத்தினால் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூ.மி. 0.11 ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இது தொடர்பில் ஆரம்ப கூட்டத் தொடர்கள் 02 நடாத்தப்பட்டுள்ளதுடன், இதற்கென ரூ.மி. 0.0862 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. இதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.மி. 0.107 ஆகும்.

**6.8 "சரியான ஆரம்பத்துக்காக" முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு ஆகக் குறைந்த தரநியமங்களின் ஆவணத்தை இற்றைப்படுத்தல்.**

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்களின் ஆவணத்தை திருத்தியமைத்து அச்சிடுவதற்குத் தேவையான ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூ.மி. 1.2133 ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது அச்சிடப்படவுள்ளது.

**6.9 முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தரநியமங்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தித் தரநியமங்கள் 2015 ஆண்டு தேசிய மட்டத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், (வயது 3 – 5 இற்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கானது) இவை “தேசிய தரநியமங்கள்” எனப் பெயரிடப்பட்டு தற்போது அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த முன்பள்ளிப் பருவ அபிவிருத்தித் தரநியமங்களை, பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிக் கையேடாகத் தயார் செய்து இதனை பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்வதற்கான மாகாண மட்டத்திலான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் 2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டன.
மேலும், தெற்கு, மேற்கு, மத்திய, ஊவா ஆகிய மாகாணங்களின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான 149 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் சபறகமுவா, வடமேல், வடமத்தி, வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் 182 நிகழ்ச்சித்திட்டங்கள் இதுவரை நடாத்தப்பட்டுள்ளதுடன், நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 3.472 ஆகும்.

## 6.10 முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான தேசிய டிப்ளோமா சான்றிதழ் பாடநெறி மற்றும் பாலர் பாடசாலை டிப்ளோமா பாடநெறிக்கு உதவி வழங்குதல்.

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு தேசிய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிக்கான பாடவிதானத்தை தயார் செய்யும் ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது தேசிய பயிலுனர் மற்றும் தொழில்பயிற்சி அதிகார சபையுடன் (NAITA) இணைந்து நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இலவசமாக நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலை டிப்ளோமா பாடநெறிக்கு உதவி வழங்குவதற்காக ரூ.மி. 0.2 ஒதுக்கப்பட்டதுடன், அதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.2 ஆகும்.

## 6.11 முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா பாடநெறிகளை பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டம்

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தொடர்பான ஒரு வருட டிப்ளோமா (பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள்) பாடநெறிகள் தேசிய மட்டத்தில் தரம் வாய்ந்ததாக உள்ளதை உறுதிப்படுத்தி சிறுவர் செயலகத்தின் கீழ் பதிவு செய்து கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் கீழ் தேசிய மட்டத்திலான 62 டிப்ளோமா பாடநெறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ.மி. 0.01 ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.003 ஆகும்.

## 6.12 முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு தொடர்பான ஆராய்ச்சி

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு தொடர்பிலான 5 ஆராய்ச்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டன. புத்தளம், கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் மிக வெற்றிகரமாக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.003 ஆகும்.

### 6.13 அருண தக்கின ரட்டா' சிறுவர்களின் சித்திரக் கண்காட்சியும், செயலமர்வும்

முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் ஆக்கங்கள், திறமைகளை மெருகூட்டுவதற்காக வருடாந்தம் நாடளாவிய மட்டத்தில் சித்திரக் கண்காட்சியொன்று நடாத்தப்படுகின்றது. நாட்டின் சகல மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பாலர் பாடசாலை மாணவர்களின் சித்திர ஆக்கங்கள் பெறப்பட்டு, அவற்றிலிருந்து தெரிவு செய்து கொள்ளும் 500 சித்திர ஆக்கங்களைக் கொண்டதாக கொழும்பில் இந்தக் கண்காட்சி நடாத்தப்பட்டு குறித்த மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்படுகின்றது.

இந்த ஆண்டில் இது செப்தெம்பர் மாதம் 11 ஆம் திகதி மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வளவில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் ரூ.மி. 4.775 ஆகும் என்பதுடன், அதற்கமைய பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சித்திர ஆக்கத்துக்கான 331 நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக ரூ.மி. 2.317 ஆன ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 2.246 ஆகும். பிரதேச ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி தெரிவு செய்துகொள்ளும் சித்திர ஆக்கங்களிலிருந்து தேசிய மட்டத்திலான அருண தக்கின ரட்டா'' சித்திரக் கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழாவுக்கான சித்திர ஆக்கங்களைத் தெரிவு செய்துகொள்ளும் வகையில் 25 மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.0669 ஆகும். மேலும் இதன் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சித்திரக் கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழாவுக்கு செய்யப்பட்ட செலவினம் ரூ.மி. 4.544 ஆகும்.








### 6.14 பு அருண தக்கின ரட்டா'' சித்திரக் கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழா

யூலை மாதம் 14 முதல் 20 வரை முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம் இம்முறையும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது. இதன் இலக்குக் குழுக்களாக இருப்பது முன்பள்ளிப் பருவ கொள்கை வகுப்பாளர்கள், பாலர் பாடசாலை மாணவர்கள், பாலர் பாடசாலை ஆசிரியைகள், வெளிக்கள அலுவலர்கள், பெற்றோர், கர்ப்பிணித் தாய்மார் ஆகியோர் ஆவர். இதற்கமைய மேற்படி இலக்குக் குழுக்களுக்கான பயன்களாக பாலர் பாடசாலைகளுக்கான கற்கை உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல், மாதிரிக் கிராமங்களின் கீழ் பாலர் பாடசாலைக்

கட்டிடங்களை நிர்மாணிக்க உதவி வழங்குதல், அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், மாணவர்களுக்கான அழகியற்கலை நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

இந்த தேசிய வாரத்தில் வெகுசன ஊடகங்கள் மூலம் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றி மக்களை அறிவுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இம்முறை "நாளைய தினம் சிரித்திடும் பரிசுத்தமான பிள்ளைகள் சமுதாயத்தை பாதுகாத்திடுவோம் எப்பொழுதும்" எனும் தொனிப்பொருளின் கீழ் முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம் கொண்டாடப்பட்டது. இங்கு தற்போது சிறுவர் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள "வெலி கெலியென் பிட்டு அத்தரட்ட" (மணல் விளையாட்டிலிருந்து புத்தகத்திற்கு) எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர்கள் பாடசாலை பருவம் முதல் பாடசாலைக் கல்வி வரை ஈடுபடுவதனை சிறுவர்களுக்கு மிக இலகுவாக மற்றும் சாதகமானவாறு மேற்கொள்ளும் சூழலை உருவாக்குவதற்கு சிறுவர்களுக்குச் சாதகமான கல்வி பற்றிய எண்ணக்கருவை சமூகமயப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் முன்பள்ளிப் பருவ தேசிய வாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய மட்டத்திலான 07 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூ.மி. 2.161 ஆன மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதுவரை இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 2.09 ஆகும். பிரதேச ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூ.மி. 7.247 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், பதிவாகியுள்ள செலவினம் ரூ.மி. 6.9642 ஆகும். இதற்கமைய இதுவரை சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச ரீதியான 311 நிகழ்ச்சித்திட்டங்கள் சிறுவர்களுக்காகவும், 310 நிகழ்ச்சித்திட்டங்கள் பெற்றோருக்காகவும் தேசிய மட்டத்திலான 07 நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.








### 6.15 முன்பள்ளிப் ... த்த ... க் ... ட்டம்

நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களை முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய அறிவும், உணர்வும்மிக்கவர்களாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன், இந்தக் கிராமங்களை "மாதிரி முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக் கிராமங்களாக" மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் இவ்வாறான மாதிரிக் கிராமங்களைத் தாபிப்பதற்காக ரூ.மி. 12 ஒதுக்கப்பட்டுள்ளது. 2017 ஆகஸ்ட் மாத இறுதிக்குள் ஒதுக்கப்பட்ட தொகையில் 22 மாதிரிக்

கிராமங்களை அமுல்படுத்தவென ரூ.மி. 11.83433 ஆன ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய வழங்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி முன்பள்ளிப் பருவ மாதிரிக் கிராமங்கள் 22 இல் அபிவிருத்தி பணிகள் அமுல்படுத்தப்பட்டன. இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 10.367 ஆகும்.





**மாதிரிக் கிராமம் கருத்திட்டம்**

## 6.16 அவசர சந்தர்ப்பங்களுக்கான முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

முன் பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி ஆரம்பத்தில் திட்டமிடாத திடீரென ஏற்படுகின்ற தேவைகள் மற்றும் அவ்வவ் சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளவென ரூ.மி. 3.711 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டளன. இதன் கீழ் திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு கற்கை உபகரங்கள், எழுதுகருவிகள் போன்ற உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூ.மி. 3.680 செலவிடப்பட்டுள்ளது. மேலும் அனர்த்தத்துக்கு ஆளான மேற்படி பாலர் பாடசாலைகளை மறுசீரமைக்க மற்றும் உரிய உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு யுனிசெவ் நிறுவனமும் முன்வந்துள்ளது.

## 6.17 முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக்கு வீடுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளின் கையேடு மற்றும் அதற்குரிய பயிற்சிக் கையேட்டை அச்சிடல்

முன் பள்ளிப் பருவ அபிவிருத்திக்காக வீடுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளின் கையேடு மற்றும் அதற்குரிய பயிற்சிக் கையேட்டை அச்சிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 0.43 ஆகும். தற்போது முன்பள்ளி அபிவிருத்திக்காக வீடுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளின் கையேடு மற்றும் அதற்குரிய பயிற்சிக் கையேட்டின் சிங்களப் பிரதி ஏற்கெனவே அச்சிடப்பட்டுள்ளது.

## 6.18 ஊடக மற்றும் வெளியீடுகள்

இதன் கீழ் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தொடர்பில் மக்கள் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் துண்டுப்பிரசுரங்களை அச்சிடல், முன்பள்ளிப் பருவ பிள்ளைகளக்கான களியாட்ட வெளியீடுகளை அச்சிடல் போன்றன மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ரூ.மி. 1.156 ஒதுக்கப்பட்டதுடன், இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 1.156 ஆகும்.

### 6.19 முன்பள்ளிப் பருவ வள நிலையம் மற்றும் ஆவணக்காப்பக அபிவிருத்தி

சிறுவர் செயலகத்தின் முன்பள்ளிப் பருவ வள நிலையத்தின் வசதிகளை மேம்படுத்தத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், ஆவணக் காப்பகத்தை முறையாகப் பேணிவருவதற்கும் ரூ.மி. 0.3 மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.20 பிள்ளைகளை வளர்ப்பதற்கான நல்ல முறையியல்கள் நூலைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்கு இடையே கட்டியெழுப்பப்பட வேண்டிய தொடர்பினுள் ஒட்டுமொத்த அபிவிருத்தியைக் கொண்டு முன்பள்ளிப் பருவ பிள்ளையொன்றை நாட்டில் உருவாக்கும் நோக்கத்துடன், பிள்ளைகளை வளர்த்துக் கொள்ளும் நல்ல முறையியல்கள் பற்றி பெற்றோர் மற்றும் சமுதாயத்தை அறிவுறுத்துவது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.
ஆண்டு முழுவதிலும் பிரதானமான மூன்று பிரிவுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆண்டின் ஆரம்பத்தில் தேசிய மட்டத்தில் 25 மாவட்டங்களுக்கு உரித்தான முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றப்பட்டார்கள் என்பதுடன், இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.0335 ஆகும். இதன் பின்னர், மாவட்ட அலுவலர்களினால் மாவட்டத்திற்கு உரித்தான சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கென ரூ.மி. 0.730 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பிரதேச மட்டத்தில் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களினால் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் உரித்தான பெற்றோர், பிள்ளைகளை வளர்ப்பதற்கான சரியான முறையியல்கள் பற்றி அறிவுறுத்தப்படுகின்றனர். இதன் மூன்றாம் கட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அளவு ரூ.மி. 1.324 ஆகும். இதன் நிதியசார் முன்னேற்றம் ரூ.மி. 1.068 ஆகும்.

### 6.21 பிள்ளைகளை வளர்ப்பதற்கான நல்ல முறையியல்கள் நூல் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு கையேடுகளை அச்சிடல்

பிள்ளைகளை வளர்ப்பதற்கான நல்ல முறையியல்கள் நூலைப் பயன்படுத்தி பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெறுவதுடன், அதற்காக முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களுக்கு மற்றும் முன்பள்ளிப் பருவ விடயத்துறையுடன்

சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அலுவலர்களுக்கு விநியோகிப்பதற்காக இக்கையேடு அச்சிடப்படுகின்றது. அதற்கமைய வெளிக்கள அறிவுறுத்தல்களின் போது பெற்றோருக்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களைக் கொண்டதாக பிள்ளைகளை வளர்ப்பதற்கான நல்ல முறையியல்கள் நூலைப் பயன்படுத்தி கையேடொன்றை அச்சிடுவது இதன் போது இடம்பெறுகின்றது இது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது பூர்த்தியடைந்து வருகின்றன.

## 6.22 முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்பு பற்றிய வளக் குழுமம்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய வளக் குழுமத்தை தாபிப்பதற்காக 2017 செயற்றிட்டத்தினால் ரூ.மி. 0.05 ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தித் துறையின் நிபுணர்களான பயிற்றுவிப்பாளர்கள் மிகவும் அரிதாக உள்ளதனால் தற்போது நாட்டின் பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களுக்கு பயிற்சியறித்து அவர்கள் ஊடாக பெற்றோர், இளைஞர் குழுக்கள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்காக முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் செயற்படுகின்ற வெளிக்கள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய உயர் பயிற்சியொன்றை வழங்கி வெளிக்களத்தில் பயிற்சி நிபுணர்களாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படவுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் ஒரு பகுதியினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டார்கள் என்பதுடன், எஞ்சிய அலுவலர்கள் அடுத்த ஆண்டில் அழைக்கப்படவுள்ளார்கள்.

## 6.23 முன்பள்ளிப் பருவ பிள்ளைகள் தொடர்பில் மதிப்பீடு செய்யும் அளவுகோள்கள்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி மதிப்பீடு செய்யும் அளவுகள் தற்போது முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தரநியமங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளன. மேற்படி மதிப்பீடு செய்யும் அளவுகோள்களை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு 2017.09.25 ஆம் திகதி மற்றும் 26 ஆம் திகதிகளில் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இவ்வாறு வெளியிட்டு வைக்கப்பட்ட பின்னர் தற்போது மதிப்பீடு செய்யும் அளவுகோள்கள் அச்சிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக ரூ.மி. 3.223 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து மதிப்பீடு செய்யும் அளவுகோள் தொகுப்புக்களைத் தயார் செய்து சகல முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி அலுவலர்களையும் உள்ளடக்கும் வகையில் மாகாண மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும், பின்னர் பிரதேச மட்டத்தில் அலுவலர்களினால்

முன்பள்ளிப் பருவ ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்கும் 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 0.755 ஆகும்.

### 6.24 “வெலி கெலியென் பிட்டு அத்தரட்ட” எனும் சிறுவர் சார்பான கல்வி பற்றிய முன்னோடிக் கருத்திட்டம்

முன்பள்ளிப் பருவ பிள்ளைகள் வயது 3-5 இற்கு இடைப்பட்ட காலத்தில் மொழி அபிவிருத்தி, ஆளுமை அபிவிருத்தி, சமூகத்துடன் இணைத்தல் போன்ற பணிகள் தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வனைத்து பணிகளுக்கும் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஊடாக ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குதல் வேண்டும். இதன் அடிப்படையில் முன்பள்ளிப் பருவ பிள்ளை முறையாக பாடசாலைக்குப் பிரவேசித்தல் வேண்டும். இந்த முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களிலிருந்து முறையாக பாடசாலையில் பிரவேசிக்கின்ற பிள்ளைக்கு மேற்படி நிலைமாறுகாலத்தில் சுமுகமானமுறையில் அதனைச் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும் எனினும் இந்த நிலைமை அவ்வாறு இடம்பெறுகின்றதா என்பது கேள்விக்குரியதாகும். பாலர் பாடசாலையில் பாலர் பாடசாலை ஆசிரியருக்கு உரித்தான பணிகள் மற்றும் முறைசார்ந்த பாடசாலையினுள் ஆரம்பப் பிரிவிலுள்ள ஆசிரியருக்கு உரித்தான பணிகள் மற்றும் பொறுப்புக்களை முறையாக பிரித்து இனங்காணல், வெளிக்களத்தில் அமுல்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்வதற்கு உகந்த முறையியலைத் தயார் செய்வதானது, இந்தக் கருத்திட்டத்தின் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்ற பணிகளாகும்.
இந்த முன்னோடிக் கருத்திட்டத்திற்கு 2017 இன் செயற்றிட்டத்தின் மூலம் ரூ.மி. 0.6 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன், கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், கேகாலை, மாத்தறை மற்றும் மொனராகலை மாவட்டங்களை மையமாகக் கொண்டு 30 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டதுடன், இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.589 ஆகும்.

**6.25 விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் இருக்கின்ற பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்களை வழங்கிவைத்தல்**

விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் இருக்கின்ற பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கிவைப்பதற்காக 2017 இன் செயற்றிட்டத்தின் மூலம் ரூ.மி. 0.264 ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன், சிறுவர் செயலகத்திற்குக் கிதைத்த கோரிக்கைகளுக்கு அமைய உபகரணங்களை உதவியாக வழங்கிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**6.26 பிரதேச மட்டத்திலான விசேட கருத்திட்டங்கள்**

பிரதேச செயலக மட்டத்தில் முன்பள்ளிப் பருவம் தொடர்பில் இனங்காணப்பட்ட சிக்கல்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விசேட கருத்திட்டப் பிரேரணைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தகுந்த கருத்திட்டப் பிரேரணைகளை அமுல்படுத்துவது இதன் போது மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய, இதற்காக ரூ.மி. 0.4 ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன், இதன் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 0.390 ஆகும். அதற்கமைய ஹொரண, வெலிகந்த, எஹலியகொட, தமன்கடுவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் விசேட கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.